# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 42


**திரு. உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு



2023

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **1.** | **முன்னுரை** | **1** |
| **2.** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)** | **11** |
| 2.1 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன வரலாறு | **13** |
| 2.2 | நிறுவன அமைப்பு | **14** |
| **3.** | **சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்** | **17** |
| 3.1 | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD)– திட்டம் | **19** |
| 3.2 | மகளிர் திட்டம் | **21** |
| **4** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்** | **23** |
| 4.1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) | **26** |
| 4.2 | தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP) | **26** |
| 4.3 | தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (**DDU–GKY)** | **27** |
| 4.4 | தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) | **28** |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| **5.** | **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)** | **29** |
| 5.1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் சுய உதவிக் குழுக்கள் | 31 |
| 5.2 | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு | 35 |
| 5.3 | நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் பெறுவதற்கான வழி வகை. | 47 |
| 5.4 | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள் | 54 |
| 5.5 | வாழ்வாதார மேம்பாடு | 64 |
| 5.6 | இளைஞர்களுக்கான திறன் பயிற்சி | 82 |
| 5.7 | விருதுகள் | 85 |
| **6.** | **தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்** | **91** |
| 6.1 | மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு | 94 |
| 6.2 | மின்னணு நிதி பரிவர்த்தனை | 95 |
| 6.3 | இரட்டை அங்கீகாரத்திற்கான முன்னோட்டம் | 96 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 7. | **தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம்** (DDU–GKY) | 97 |
| 7.1 | திறன் மற்றும் வாழ்வாதார அழைப்பு மையம் | 100 |
| 7.2 | பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து ஆங்கிலம் மற்றும் மென் திறன் பயிற்சி | 101 |
| 8. | **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)** | 103 |
| 8.1 | திட்டக் கூறுகள் | 106 |
| 8.2 | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு | 114 |
| 8.3 | நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள் | 115 |
| 9. | **தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 (VKP)** | 117 |
| 9.1 | முக்கியக் கூறுகள் | 121 |
| 9.2 | ஆதரவு நிறுவனங்கள் | 132 |
| 9.3 | கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 133 |
| 10. | **முடிவுரை** | 139 |

# 1. முன்னுரை

**முன்னுரை**

**"பணத்தை வைக்க வேண்டியவர் வைத்து,**
**கொடுக்க வேண்டிய இடத்திலே கொடுத்து,**
**பெற வேண்டிய நேரத்திலே பெற்று,**
**அதை பாதுகாக்கின்ற அமைப்பாக மகளிர்**
**சுய உதவிக் குழுக்கள் உள்ளன".**

இதே முறையில், இதே வகையில், இதே நிலையில், இதே கட்டுப்பாடுகளோடு, சட்ட திட்டங்களோடு, விதிமுறைகளோடு, பெண்களை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, அவர்கள் பாடுபட்டுப் பணியாற்றி, அக்கறையோடு இந்த இயக்கத்திலே ஈடுபடுகின்ற காரணத்தால் அவர்களின் பொருளாதாரம் உயர்ந்து, தற்சார்பு பெற்றவர்களாக, தங்களை உயர்த்திக் கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி பெற்று வருகின்றனர் என்பதை அறிந்து நான் இந்தத் தாய்மார்களையெல்லாம் மிக மிகப் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

– **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்
மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்

புத்துலக ஆக்கத்திற்கு இன்றியமையாது இருப்பது பெண்களே. பெண்களின் சமூக – பொருளாதார உரிமைகளை மீட்கவும், பெண்கள் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல், அவரவர்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும்... அவர்களுக்கு தன்மானத்தோடு வாழக்கூடிய அளவிற்குத் தன்னம்பிக்கையைத் தந்தாக வேண்டும்... என்பதை நோக்கமாகக் கொண்டு முன்னத்தி ஏராக **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்களால் 1989ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது தான் மகளிர் சுய உதவிக் குழு என்ற உன்னத இயக்கம்.

சொற்களால் பெண்களைப் போற்றி, செயல்களால் அவர்களை அடிமைப்படுத்திய பழமைவாத காலத்தை மாற்றிய நமது அரசு, பெண்கள் நலனும் உரிமையும் காத்திட என்றும் துணை நிற்கும்.

**அடிமைத்தனத்தை தகர்த்தெறியும்**
**வலிமைமிகு போர்க்குரல் பெண்களே...**

**திரு. மு.க. ஸ்டாலின்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

அடித்தள மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக தமிழ்நாடு அரசு சமூக பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, அதன் மூலம் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் மூலம் திட்டங்களின் பயன்கள் நேரடியாக மக்களை சென்றடைந்து அவர்களின் மேல்நோக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதன் மூலமாக தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. மாநிலத்தின் மக்கள் தொகையில் 49.9 சதவீதம் பெண்கள் உள்ளனர். இதன் அடிப்படையில் பெண்கள் மற்றும் சமுதாயம் பயன்பெறும் வகையில் பெண்களுக்கான பொருளாதார வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்ற உண்மையை அரசு உணர்ந்துள்ளது. குழந்தைகளின் மேம்பாட்டின் மீதான பெரும் முதலீடுகளானது அடுத்த தலைமுறையைச் சார்ந்த பெண் குழந்தைகள் மற்றும் மகளிருக்கு, சமூகத்திலும் பொருளாதாரத்திலும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தி வறுமையை குறைத்து வளர்ச்சி உருவாக காரணமாகிறது.

அதிகாரப்படுத்துதல் என்பது தனிநபர்கள் அல்லது குழுவினர் தங்களது விருப்பங்களை

தெரிவிப்பதற்கும் அத்தகைய விருப்பங்களை செயல் வடிவமாக்குவதற்கும், இறுதி செய்வதற்குமான திறனை மேம்படுத்துவதே ஆகும்.

பெண்களை அதிகாரப்படுத்துவதற்கான தொலைநோக்கு திட்டங்களை உருவாக்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டிலேயே பெண்களுக்கான சமமான சொத்துரிமை வழங்குவதை சட்டமாக்கப்பட்டதே இதற்கான ஒரு சிறந்த உதாரணம் எனலாம்.

வளர்ந்து வரும் தொழில்மயமாக்குதலுடன் இணைந்து கல்வி, வேலைவாய்ப்பு, பெரும் உள்கட்டமைப்பு வசதிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் மக்கள் நல செயல்பாடுகள் வாயிலாக நாட்டிலேயே பெரும் அதிகாரம் பெற்றவர்களாக தமிழக பெண்கள் கருதப்படுகிறார்கள்.

1989 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம், பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான மற்றொரு முக்கிய படி நிலையாகும். மகளிர் சுய உதவிக் குழு

இயக்கமானது, பெண்களுக்கான ஒருங்கிணைந்த அதிகார பகிர்வு, வறுமை ஒழிப்பு, சமூக மாற்றம், சமூக பொருளாதார ஆற்றல் அளிப்பு மற்றும் நிதி உள்ளாக்கம் ஆகியவற்றை நோக்கி செயல்படுவதற்கான வினை ஊக்கியாக வளர்ந்துள்ளது.

பெண்கள் மட்டுமின்றி, ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்கள் சமூக ஒருங்கிணைப்பு, சுய வேலைவாய்ப்பு மற்றும் குழு செயல்பாடுகளால் வருவாய் ஈட்டுவதற்காக அமைக்கப்பட்ட சிறு, குறு தொழில்கள், தொழில் தொகுப்புகளாக மேம்படுத்தப்பட்டதன் மூலம் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரின் வாழ்க்கையும், வாழ்வாதாரமும் மேம்பட்டுள்ளது.

தற்பொழுது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கிராம மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மற்றும் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றை முன்னெடுத்து செல்கிறது. இத்தகைய திட்டங்கள் ஏழைகளுக்கான நிறுவனங்களை உருவாக்குதல், சமுதாய மூலதனங்களை உருவாக்குதல் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்தல் ஆகிய சமுதாயமே

இயக்கும் வளர்ச்சி அணுகுமுறை எனும் கொள்கையில் வலுவாக வேரூன்றி உள்ளது.

ஏழைகள், விளிம்புநிலை நலிவுற்ற பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக அரசின் சேவைகள் கடைகோடி ஏழை மக்களிடம் சென்றடைவதை உறுதி செய்வதே இத்தகைய திட்டங்களின் முக்கிய குறிக்கோளாகும். மேற்கண்ட திட்டங்களால் உருவாக்கப்பட்ட சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சமூக வல்லுநர்களின் வழிகாட்டுதலின்படி திட்ட பலன்கள், அரசு சேவைகள் ஏழைகளை சென்றடைவதற்கான பாதையாக அமைந்துள்ளன.

சுய உதவிக் குழுக்களின் திறன்களை வலுப்படுத்துவதிலும், அவற்றை ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் கூட்டமைப்புகளாக உயர்த்துவதிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களை வலுப்படுத்துவதுடன், சுய உதவிக் குழு தயாரிப்புகளை ஒன்று திரட்டி, அவற்றை மதிப்பு கூட்டி, உற்பத்தி பொருட்களை தர நிர்ணயம் செய்து, வணிக அடையாளப்படுத்தி, இவற்றை நேரடி மற்றும் இணைய தளங்களின் வாயிலாக உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தை

வாய்ப்புகளை உருவாக்குவதில் இந்நிறுவனம் முக்கிய பங்காற்றுகிறது.

இத்துடன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நகர மற்றும் கிராமப்புறத்தைச் சார்ந்த ஏழை குடும்பங்களின் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன்களை மேம்படுத்தி இதன் மூலம் ஊதிய வேலைவாய்ப்புகள் மற்றும் சுய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி தரும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வறுமை ஒழிப்பு, பசியற்ற சமூகத்தை உருவாக்குதல், நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தல், பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல், பொருளாதார வளர்ச்சியை எளிதாக்குதல், சமத்துவமின்மையைக் குறைத்தல் ஆகியவை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடையும் வகையில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டை உயர்த்துதல் போன்ற திட்டங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது பிற துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் ஏழை, இலக்கு மக்கள், விளிம்பு நிலை சமூக மக்களின் நிலையான வருமானத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல் இவர்களின் மற்ற அனைத்து

உரிமைகளையும் பூர்த்தி செய்து அதன் மூலம் இவர்களின் வாழ்க்கை தரம் உயர வழிவகுக்கிறது.

மூன்று வறுமை ஒழிப்பு திட்டங்களும் ஒன்றிணைந்து செயல்படுவது மட்டுமல்லாமல், மாநில அளவில் பிற துறைகளின் மனிதவளம் மற்றும் நிதிகளை ஒருங்கிணைத்தல் மூலமாக ஊரக மற்றும் நகர்ப்புர ஏழை மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதன் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது வறுமையற்ற தமிழகத்தை உருவாக்குவதை இலக்காக கொண்டு செயல்படுகிறது.

# 2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)

## 2.1 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன வரலாறு

தமிழ்நாடு அரசு, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு தனி அமைப்பை 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 9 அன்று தொடங்கியதன் மூலம் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்நிறுவனம், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சுய–சார்பு ஆகியவற்றின் மூலமாக மகளிர் சமூக பொருளாதார முன்னேற்றம் அடைவதை முதன்மை நோக்கமாக கொண்டு அமைக்கப்பட்டது.

இந்நிறுவனம் தொடங்கியதிலிருந்து சமூக நலத் துறையின் கீழ் 2006 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது. அடித்தட்டு மக்களை விரைந்து சென்றடைவதற்கும், மகளிருக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஊராட்சி நிறுவன அமைப்புகளுடன் ஒருங்கிணைத்து, ஜுலை 2006 ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தி அதன் மூலம் பிணைப்பு, நம்பிக்கை மற்றும் தற்சார்பு போன்ற உணர்வினை சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் அனைத்து மகளிரின் மேம்பாட்டை முன்னெடுத்து செல்கிறது.

ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் உள்ள ஏழை, விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து கண்காணிக்கப்படுகிறது.

## 2.2. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், இந்திய நிறுவனச் சட்டம், 2013-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, இந்நிறுவனத்தின் தலைவராக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் உள்ளார். இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை முன்னெடுக்க மேலாண்மை இயக்குநரும், அவருக்கு

உறுதுணையாக செயல் இயக்குநர், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், நிறுவன பணியாளர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். மேலும், நிதி உள்ளாக்கம், வேளாண்மை மற்றும் நிறுவனங்களை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு கருப்பொருட்களுக்கான வல்லுநர்கள் ஆலோசகர்களாக செயல்படுகிறார்கள்.

மாவட்ட அளவில், இணை இயக்குநர் நிலையில் உள்ள திட்ட இயக்குநரின் (TNSRLM) வழிகாட்டுதலின்படி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு செயல்படுகிறது. மாவட்டத்தில் கள அளவிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக, திட்ட இயக்குனரின் கீழ் ஒவ்வொரு கருப்பொருள் பகுதிக்கும் உதவி திட்ட அலுவலர்கள் செயல்படுகிறார்கள்.

ஊரக பகுதிகளில், வட்டார அளவில் உள்ள வட்டார இயக்க மேலாண்மை அலகில் திட்ட செயல்பாட்டினை வட்டார மேலாளர் வழி நடத்துகிறார். திட்ட செயலாக்கத்தின் ஒவ்வொரு கருப்பொருளுக்கும் ஒரு வட்டார ஒருங்கிணைப்பாளர் செயல்படுகிறார். அதேபோல், நகர்ப்புரங்களில், திட்டக்கூறுகளை செயல்படுத்துவதற்கு, 3,000 ஏழை

குடும்பங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு சமுதாய ஒருங்கிணைப்பாளர் வீதம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கிராம ஊராட்சி அளவில், கள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் (CST), சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBC), சமுதாய வளப் பயிற்றுநர்கள் (CRP) (பண்ணை மற்றும் பண்ணை சாரா), சமுதாய வளப்பயிற்றுநர்கள் (CRP) (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) மற்றும் சமுதாய வல்லுநர்கள் (CP–வேலைவாய்ப்பு) என 5 சமுதாய வளப் பயிற்றுநர்கள் உள்ளனர். இதேபோல், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், ஒவ்வொரு 600 ஏழை குடும்பங்களுக்கும் ஒரு சமுதாய வளப் பயிற்றுநர் (CRP) உள்ளார்.

# 3. சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்

## 3.1 பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டம்

1980 ஆம் ஆண்டிற்கு முன்பு செயல்படுத்தப்பட்ட ஊரக வளர்ச்சி திட்டங்களில் மகளிர் இலக்கு மக்களாக சேர்க்கப்படவில்லை. அதன் பின்பு முதல் முறையாக ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கு மகளிர் குழுக்கள் மூலமாக நிதி உதவிகள் வழங்கி அவர்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டது. இருப்பினும், பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டையும் கடந்து ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான அணுகுமுறை தேவைப்பட்டதால் பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்குமான எவ்வித பிணைப்பும் இல்லாமல் இருந்தது. இந்த காரணத்தால் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) திட்டம் உருவானது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (DeW) பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் அரசு திட்டங்களில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாமல் அவர்களின் ஒட்டுமொத்த

வளர்ச்சியில் கவனம் செலுத்தும் புதிய அணுகுமுறை உருவாக்கப்பட்டது.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடனான மாற்று அணுகுமுறையின்படி ஜனநாயக, சமத்துவ, கூட்டு சமூக அமைப்பு போன்றவை சுய உதவிக் குழுக்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. முதலில் விவசாயம் மற்றும் நிலம் சார்ந்த திட்டமாக திட்டமிடப்பட்டது. பின்னர், இது அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவி குழுக்களை உருவாக்கி வளர்ப்பதன் மூலம் மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கான இயக்கமாக உருவானது.

தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு எனும் புதிய அணுகுமுறை துவங்கப்பட்டு, பின்னர் 1991–92 ஆம் ஆண்டில் இத்திட்டம் அப்போதைய சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மேலும், 1992–93 ஆம் ஆண்டில் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

அடுத்த 9 ஆண்டுகளில் 5,207 சுய உதவிக் குழுக்களில் உள்ள 1,20,960 மகளிருக்கு 80 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டது. மேற்கண்ட இத்திட்டமானது, 31.12.1998 அன்று

அதிகாரப்பூர்வமாக முடிவடைந்த போதிலும் இதன் மூலம் உருவான சுய உதவிக் குழு இயக்கத்தின் வாயிலாக வேளாண் நிலங்கள் மேம்படுத்தப்பட்டு வேளாண்மை பொருளாதாரம் உயர்ந்ததுடன் தமிழ்நாட்டில் மகளிரின் பொருளாதாரமும் மேம்பட்டது.

### 3.2. மகளிர் திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்தின் வெற்றியானது, மாநிலம் முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள ஏழை மற்றும் மிக பின்தங்கிய மகளிரிடம் சென்றடைவதற்கு அடித்தளமிட்டது. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் 1997–ம் ஆண்டு இத்திட்டமானது மாநிலம் முழுவதும், மாநில அரசின் திட்ட நிதியுதவியுடன் "மகளிர் திட்டம்" என்ற பெயரில் துவக்கப்பட்டது. இத்திட்டமானது படிப்படியாக அனைத்து மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. முழுமையான நகர்பகுதியைக் கொண்ட சென்னை மாவட்டம், 2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் இறுதியாக இணைக்கப்பட்டது

மகளிர் திட்டமானது, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்கி இவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்குதல், சேமிப்புகளை உயர்த்துதல் மற்றும் வங்கி கடன்கள் பெறுதல் மூலம் சமூக பொருளாதார தடைகள் நீக்கப்பட்டு இதன் மூலம் இவர்கள் சமூகத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக செயல்படுவார்கள்.

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழு இயக்கம் பத்தாண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டதின் அடிப்படையில் ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 1999 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா (SGSY) என்ற புதிய திட்டத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.

மாநிலத்தில் சுய உதவிக் குழு இயக்கத்தை தொடர்ந்து ஊக்கப்படுத்துவதன் வாயிலாக தற்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ், மொத்தம் 4.48 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

# 4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்

**4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்**

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வறுமை ஒழிப்பினை முதன்மை நோக்கமாக கொண்டு சமூக பொருளாதார முன்னேற்றத்தை உறுதிபடுத்தும் நோக்கில் செயல்படுகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, மகளிருக்கான சமூக – பொருளாதார மற்றும் அரசியல் பங்களிப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் மகளிருக்கான பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தப்படுவதன் மூலம் இவை சாத்தியமாகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்

1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)
2. தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)
3. தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டம் (DDU–GKY)
4. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

## 4.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, ஊரகப்பகுதிகளில் ஏழைகளைக் கொண்டு வலுவான மற்றும் துடிப்பான மக்கள் அமைப்புகளுக்கான அடித்தளத்தை உருவாக்கும் பொருட்டு, வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்தி இத்திட்டத்தின் மூலம் வாழ்வாதார முன்னெடுப்புகள், வங்கி கடன் இணைப்பு மற்றும் நிதி சார்ந்த பிற சேவைகளை பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு அக்குடும்பங்களின் வருமானம் உயர்த்தப்படுகிறது. தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமானது (DAY–NRLM) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பகிர்வான 60:40 என்ற விகிதாச்சாரத்தில் மாநிலத்தின் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

## 4.2. தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP)

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் உலக வங்கி உதவியுடன் ஒன்றிய அரசால் வாழ்வாதாரம் மற்றும் தொழில்

ஊக்குவிப்பு நடவடிக்கையை மேம்படுத்த 5 மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 20 வட்டாரங்களில் முன்மாதிரியான முன்னோடி திட்டமாக சோதனையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது ஏழைகளை உள்ளடக்கிய பல நிலையிலான சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதன் மூலம் இந்த அமைப்புகள் வலுப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாச்சார நிதி பங்களிப்புடன் 2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

## 4.3. தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU – GKY) ஒன்றிய மற்றும் மாநில அரசு இடையே 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்ட வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்டமாகும். இத்திட்டமானது, கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து NSQF சான்றிதழுடன் கூடிய குறைந்தபட்சம் 70% பணியமர்வு அளிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

## 4.4. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

நகர்ப்புர ஏழைகளைக் கொண்டு வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி திறன் பயிற்சி வழங்குதல், நுகர்வு மற்றும் நிறுவனம் அமைக்க வட்டி மானியத்துடன் கூடிய கடன் இணைப்பு பெற வழிவகை செய்தல் வாயிலாக அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாச்சார நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

# 5. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

## 5. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

2012 ஆம் ஆண்டில், ஒன்றிய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய நோக்கமானது, ஏழைக் குடும்பங்களுக்கு சுய வேலைவாய்ப்புகள் மற்றும் திறன் சார்ந்த வேலைவாய்ப்புகளை வழங்கி அத்துடன் வாழ்வாதார மேம்பாடு நடவடிக்கைகள், நிதி உதவிகள் வழங்குதல் மற்றும் பிற சேவைகளை அளிப்பதன் மூலம் வறுமையைக் குறைப்பதே ஆகும். நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்காக ஏழைகளின் சமுதாயம் சார்ந்த அமைப்புகளை வலுவான மற்றும் துடிப்பான நிறுவன அமைப்புகளாக மாற்றுவதன் மூலம் இது சாத்தியமாகிறது.

### 5.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு முன், சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு அரசின் மகளிர் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் கீழ் மேம்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முக்கிய கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இவ்வியக்கத்தின் நோக்கமானது ஏழைகளுக்கான சமுதாய அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தி அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியான வங்கி இணைப்புடன் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டக் கூறுகளுடன் இணைந்து செயல்படுத்துவதின் மூலம் அவர்களின் நிலையான வருமானம் உயர்த்தப்படுகிறது.

உலக வங்கி உதவியுடன் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு (PIP) என்ற செயல்முறையின் மூலம் ஊரகப் பகுதிகளில் ஏழைகள் அடையாளம் காணப்பட்டு, அந்த குடும்பங்களில் உள்ள மகளிரை உள்ளடக்கி புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஊரகப் பகுதிகளில் இலக்கு மக்கள்

குடும்பங்களிலிருந்து 2014–15 ஆம் ஆண்டு முதல் 1.65 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை எண். 1**

| **வ. எண்.** | **ஆண்டு** | **சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | 2014–15 | 11,328 |
| 2. | 2015–16 | 9,482 |
| 3. | 2016–17* | 42,724 |
| 4. | 2017–18 | 9,338 |
| 5. | 2018–19 | 8,774 |
| 6. | 2019–20 | 13,510 |
| 7. | 2020–21 | 24,456 |
| 8. | 2021–22 | 16,519 |
| 9. | 2022 –23 | 29,052 |
| | **மொத்தம்** | **1,65,183** |

* (வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 70 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு, 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மேலும் 50 வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இந்த வட்டாரங்களில் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் 2017 ஆம் ஆண்டில் இத்திட்டம்

நிறைவுற்றதும், TNSRLM திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது).

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் தவிர, முன்னர் மகளிர் திட்டம் மூலமாக அமைக்கப்பட்ட 1,53,392 சுய உதவிக் குழுக்களுக்கும் புத்துயிர் அளிக்கப்பட்டு, தற்போது ஊரகப் பகுதிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மொத்தமாக 3.18 இலட்சம் சுய உதவிக் குழுக்களில் 36.25 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர்.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது வாழ்வாதார மேம்பாடு, நிதி உதவி மற்றும் பிற சேவைகளை வழங்குதல் மூலம் ஏழைகளின் குடும்ப வருமானத்தை அதிகரிப்பதே ஆகும். இவைகள் பின்வரும் செயல்பாடுகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு | திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகள் | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு |
| நிதி உள்ளாக்கம் | வாழ்வாதார மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் | திறன் பயிற்சிகள் |

## 5.2 சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு

சமூக ஒருங்கிணைப்பானது தகுதியுள்ள மகளிரை சுய உதவிக் குழுக்களில் இணைத்து அல்லது குழுக்களாக அமைத்து, அவற்றிற்கு நிதி ஒழுக்கம் மற்றும் ஜனநாயக ரீதியாக முடிவு எடுப்பதன் மூலம் ஏழைகளுக்கான நிறுவனமாக மேம்படுத்துவதை உறுதி செய்கிறது. இக்குழுக்களால் முறையான கூட்டங்களை நடத்துதல், முறையான சேமிப்பு, உள்கடன் வழங்குதல், முறையான உள்கடன் திருப்பம் மற்றும் முறையான கணக்கு பதிவேடுகளை பராமரித்தல் ஆகிய 5 முக்கிய கோட்பாடுகள் கடைபிடிக்கப்படுகிறது.

**சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மிகவும் ஏழை, ஏழை, மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள மக்கள் அனைவரையும், மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மூலம் ஏழைகள் அடையாளம் காணப்பட்டு, விடுபட்ட ஏழைக் குடும்பங்களிலுள்ள மகளிரை ஏற்கனவே உள்ள சுய உதவிக் குழுக்களிலோ அல்லது புதியதாக அமைக்கப்பட உள்ள சுய உதவிக் குழுக்களிலோ இணைக்கப்படுகின்றனர்.

சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு கூட்டாக முடிவெடுத்தல் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான வங்கி கடன் இணைப்பு பெறுதல் உள்ளிட்ட நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 29,052 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கி இணைப்பு போன்ற நிதி உதவிகள் வழங்கப்படுவதன் மூலம்

அவர்களின் பொருளாதார செயல்பாடுகள் மேம்படுத்த வழிவகுக்கப்படுகிறது.

**சமுதாயம் சார்ந்த அமைப்புகள்**

இவ்வியக்கத்தின் கூறுகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், வட்டார அளவிலான கூட்டமைப்பு, மக்கள் கற்றல் மையம் போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளை சார்ந்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்களை அடைந்திட இந்த அமைப்புகளானது ஒரு வலுவான தூணாக செயல்படுகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

ஊராட்சி அளவில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சியிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் கூட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளானது, திட்டத்திற்கும் கிராம மக்களுக்கும் இடையே ஒரு முக்கியமான இணைப்பு பாலமாக செயல்படுகிறது. அதன் முக்கிய செயல்பாடாக குறைந்த வட்டியில் கடன்கள் மற்றும் அரசு திட்டங்களின் பயன்களை பெற்று தருவதாகும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது கீழ்க்கண்ட நான்கு கருப்பொருட்களில் துணைக் குழுக்களை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

1. குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்.
2. கடன் இணைப்பு மற்றும் கண்காணிப்பு.
3. வாழ்வாதார மேம்பாடு.
4. சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கமானது, இலக்கு மக்கள் மற்றும் நலிவுற்றோரை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பாகும். இச்சங்கம் 11 முதல் 19 உறுப்பினர்களை உள்ளடக்கியதுடன், இலக்கு மக்கள் குடும்பங்களை கண்டறிந்து, அவர்களை வறுமையில் இருந்து மீட்பதற்காக தனிநபர் கடன் வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், இது அவர்களின் நலிவுநிலையைக் குறைக்க உதவுகின்றது. கிராம ஊராட்சித் தலைவர் இச்சங்கத்தின் பதவி வழி தலைவராக உள்ளார்.

இதுவரை 12,734 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (பழங்குடியினருக்கான 472 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட) திட்ட செயலாக்கப் பகுதிகளான 388 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

## சமூகத் தணிக்கை குழு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு 5 பொதுக் குழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கண்காணிப்பு குழுவே சமூகத் தணிக்கை குழு ஆகும். இக்குழுவானது, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கும்.

## வட்டார அளவிலான கூட்டமைப்பு

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்டு 388 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் அனைத்தையும் வட்டார அளவில் செயல்படுத்துகிறது. கூடுதலாக சமுதாய வளப்பயிற்றுநர்களுக்கு வட்டார அளவிலான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் மையமாகவும் செயல்படுகிறது.

இக்கூட்டமைப்புகளுக்கு இந்த ஆண்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**திறன் வளர்ப்பு**

எந்தவொரு சமுதாய மேம்பாட்டு திட்டத்தின் நிலைத்த தன்மைக்கும் சமூக மூலதனம் ஒரு மிகப்பெரிய சொத்தாகும். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களை வழிநடத்தும் கூட்டமைப்பு நிர்வாகிகளின் திறமையையும், தகுதியையும் மேம்படுத்துவன் மூலம் இதனை அடைய முடிகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டப் பணியாளர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வளப் பயிற்றுநர்களால் பல்வேறு திட்ட கருப்பொருளில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

**அட்டவணை எண். 2**

<table>
<tr><th>வ.எண்</th><th>கருப்பொருள்</th><th>பயனாளிகள்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td>நிறுவன மேம்பாடு & திறன் வளர்ப்பு</td><td>சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் (CST), BC (IBCB), APO (IBCB)</td></tr>
<tr><td colspan="2">சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊக்குநர், பிரதிநிதிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான பயிற்சிகள்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td>நிதி உள்ளாக்கம்</td><td>சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBC) / BC (FI) / APO (FI)</td></tr>
<tr><td colspan="2">நிதி உள்ளாக்கம் மற்றும் நிறுவன நிதி பயிற்சி</td></tr>
<tr><td rowspan="2">3</td><td>வாழ்வாதார மேம்பாடு</td><td>சமுதாய வள பயிற்றுநர்கள் (பண்ணை சார்ந்த / பண்ணை சாரா), BC(LP) / APO (LP)</td></tr>
<tr><td colspan="2">பண்ணை சார்ந்த / பண்ணை சாரா வாழ்வாதாரம், தொழில் மேம்பாடு, சந்தைப் படுத்துதல்</td></tr>
<tr><td>4</td><td>கூட்டாண்மை & ஒருங்கிணைப்பு</td><td>சமுதாய வளப் பயிற்றுநர்கள் (P&C) / BC (P&C) / APO (P&C / MIS)</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம், பாலினம், சமூக உள்ளாக்கம் – சமூக மேம்பாடு, ஊராட்சி அளவிலான உறுப்பினர்கள்– சமுதாயம் சார்ந்த அமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு, தகவல் மேலாண்மை – கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, கிராம வறுமை குறைப்புத் திட்டம் போன்றவை | |
| 5 | திறன் பயிற்சி | சமுதாய வல்லுநர்கள் (வேலைவாய்ப்பு) / BC (S&P) / APO (S&P) |
| | திறன் பயிற்சி பதிவு செய்யும் செயலி போன்ற பயிற்சிகள் | |

2022–23 ஆம் ஆண்டில், 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு 3.00 கோடி ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**சமுதாய வளப் பயிற்றுநர்கள்**

சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு சமுதாய வளப் பயிற்றுநர்கள் உருவாக்கப்படுகின்றனர். கிராம அளவிலோ அல்லது ஓரிரு கிராமங்களை ஒருங்கிணைத்தோ கீழ்க்கண்ட செயல்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றனர்:

i) **சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் (CST)**

சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் கண்காணித்தலுக்கு உதவுதல்

ii) **சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBC)**

சுய உதவிக் குழுக்கள் கடன் பெறுவதற்காக வங்கிகளுடன் இணைந்து செயல்படுதல்.

iii) **சமுதாய வளப் பயிற்றுநர்கள் (பண்ணை)**

சுய உதவிக் குழு மகளிரின் பண்ணை சார்ந்த செயல்பாடுகளுக்கு உதவுதல்.

iv) **சமுதாய வளப் பயிற்றுநர்கள் (தொழில் மேம்பாடு)**

சுய உதவிக் குழு மகளிரின் தொழில் மேம்பாட்டிற்கு உதவுதல்.

v) **சமுதாய வல்லுநர்கள் (வேலைவாய்ப்பு)**

திறன் பயிற்சிக்காக இளைஞர்களை தெரிவு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

vi) **சமுதாய வளப் பயிற்றுநர்கள் (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு)**

அரசின் பல்வேறு நலத்திட்டங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பெறுவதற்கு உதவுதல்.

**சுய உதவிக் குழுக்களுக்கான நிதியுதவி**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நிதி உதவிகளானது கீழ்க்கண்டவாறு:

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

மூன்று மாதம் நிறைவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் வழங்கப்படுகிறது. இச்சுழல் நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2022-23 ஆம் ஆண்டில் 11,228 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16.93 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாய முதலீட்டு நிதி**

சமுதாய முதலீட்டு நிதி 6 மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்களின் பொருளாதார செயல்பாட்டிற்கு கடனாக வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவிற்கு

அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் கடன் தொகையாக குறைந்த வட்டி விகிதத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. இந்நிதியை அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திய பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு திரும்ப பெறப்பட்டு, அதே கிராம ஊராட்சியிலுள்ள பிற சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக சுழற்சி முறையில் மீண்டும் வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில் 13,230 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.228.66 கோடி சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

## இ. நலிவு நிலை குறைப்பு நிதி

நலிவு நிலை குறைப்பு நிதியானது நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உணவு பாதுகாப்பு, வாழ்வாதார செயல்பாடுகள் மற்றும் எதிர்பாராத செலவினங்களுக்கு (உடல் நலக்குறைவு, எதிர்பாரா மருத்துவ செலவு போன்றவை) பயன்படுத்தப்படுகிறது. கடன் தொகையாக அதிகபட்சமாக ரூ.25,000/- வரை குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. இச்சங்கமானது நிதி பயன்பாடு, கடன் திருப்பம் மற்றும் சுழற்சியினை உறுதிப்படுத்துகிறது.

**அட்டவணை எண். 3**

**சாதனைகள் விவரம்**

**(2014–15 ஆம் ஆண்டு முதல் 2022–23 ஆம் ஆண்டு வரை)**

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை / தொகை |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3.18 இலட்சம் |
| | சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 36.25 இலட்சம் |
| 2 | **சுழல் நிதி ஒரு சுய உதவிக் குழுவிற்கு ரூ.15,000/– வீதம்** | |
| | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,07,381 |
| | சுழல் நிதி தொகை (ரூபாய்)s | 161.06 கோடி |

| | | |
|---|---|---|
| 3 | **சமுதாய முதலீட்டு நிதி ஒரு குழுவிற்கு அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் வீதம்** | |
| | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,53,180 |
| | தொகை (ரூபாய்) | 976.50 கோடி |
| 4 | **நலிவு நிலை குறைப்பு நிதி தனி நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.25,000/-** | |
| | மொத்த தனி நபர்கள் | 1,62, 911 |
| | தொகை (ரூபாய்) | 172.47 கோடி |
| 5 | **சமுதாயம் சார்ந்த அமைப்புகள் – ஊரகம்** | |
| | ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 12,524 |
| | வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 388 |

### 5.3 நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் பெறுவதற்கான வழி வகை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, நிதி உள்ளாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் நிதி கல்வியறிவு, வங்கி சேமிப்பு கணக்கு

துவங்குதல், வங்கி கடன் பெறுவதற்கான வழிவகைகள் காப்பீடு மற்றும் ஓய்வூதிய சேவைகள் ஆகிய நிதி சேவைகளை ஏழைகளுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**நிதிசார் கல்வி**

நிதிசார் கல்வி என்பது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும், ஏழை மற்றும் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள குடும்பத்தினருக்கு நிதி சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், நிதிசார் திறனை வளர்ப்பதற்கும், பல்வேறு நிதி சேவைகளை எளிதில் அணுகுவதற்கு வழிவகை செய்வதன் மூலம் தகவல் இடைவெளியைக் குறைப்பதற்கும் முக்கியமான ஒன்றாகும். நிதி கல்வியறிவை மேம்படுத்தவும், திட்ட மானியங்கள், வட்டி மானியம் மற்றும் வங்கி கடன் ஆகியவை இலக்கு மக்களை அதிக அளவில் சென்றடைவதை உறுதி செய்யவும் இவ்வியக்கமானது உறுதி பூண்டுள்ளது.

**நிதிசார் கல்வி முகாம்கள் பின்வரும் ஆறு தலைப்புகளின் கீழ் நடத்தப்படுகின்றன:**

i) **நிதிசார் திட்டமிடல்:** வாழ்க்கை தேவைகள், செலவினங்கள் போன்றவை.

ii) **சேமிப்பு:** எங்கு சேமிப்பது, எப்படி சேமிப்பது, தனிப்பட்ட சேமிப்பு வங்கிக் கணக்கை செயல்படுத்துதல், வங்கிக் கணக்கு மூலம் பண பரிவர்த்தனை மேற்கொள்ளுதல் போன்றவை.

iii) **கடன்**: வங்கிக் கடன், அதன் பயன்பாடு, வாராக்கடன் பற்றிய விழிப்புணர்வு போன்றவை.

iv) **காப்பீட்டு கல்வியறிவைப் பரப்புதல்**: ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு காப்பீடு திட்டங்களில் பதிவு செய்ய வசதிகளை ஏற்படுத்துதல்.

v) **ஓய்வூதியம்:** நீண்ட கால நிதி திட்டமிடலின் தேவை, பல்வேறு ஓய்வூதிய திட்டங்கள் எளிதில் கிடைக்கச் செய்தல்.

vi) **மின்னணு நிதி சேவை:** மின்னணு பரிமாற்ற முறையினை ஊக்குவித்து, இருப்பிடம் அருகாமையில் பண பரிமாற்றத்தினை வங்கி வணிக தொடர்பாளர்கள் மூலம் செயல்படுத்துதல்.

இதுவரை 2,886 நிதிசார் கல்வி சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு (FLCRPs) பயிற்சி அளிக்கப்பட்டு, சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பல்வேறு நிதி சேவைகள் குறித்த கருத்துகளை விளக்குவதற்காக

ஃபிளிப் சார்ட்கள், பயிற்சியாளர்களின் கையேடு, அச்சிடப்பட்ட பொருட்கள் போன்றவற்றைக் கொண்ட தமிழிலான பயிற்சிக் கருவி பெட்டகம் (Kit) வழங்கப்பட்டுள்ளது. 4,420 நிதிசார் கல்வி முகாம்கள் மூலம் 2.21 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு**

கடன் பெறும் உரிமையானது, எளிதாக கடன் பெறுதல், சரியான நேரத்தில் போதுமான அளவு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறுதல் ஆகியவற்றின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்குவதன் மூலம் கிராமப்புற ஏழை மக்களிடையே நிதி உள்ளாக்கத்தை கொண்டு செல்வது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும்.

சுய உதவிக் குழுக்கள் அவர்களின் தேவைகளின் அடிப்படையில், தவணை கடன் (Term Loan) அல்லது ரொக்கக் கடன் (Cash Credit limit) அல்லது இரண்டு வகை கடன்களையும் பெற்றுக்கொள்ளலாம். தவணை கடனானது குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செலுத்தப்பட

வேண்டும். ரொக்கக் கடனானது, குறைந்தபட்சம் ரூ.6.00 இலட்சம் என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு, வருடத்திற்கு ஒரு முறை வரையறுக்கப்பட்ட அளவின்படி (Yearly Drawing Power) 3 ஆண்டுகள் வரை திரும்ப செலுத்த அனுமதிக்கப்படுகிறது.

குறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதியானது (CGFMU), முதிர்ச்சி அடைந்த சுய உதவிக் குழுக்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, ரூ.10.00 இலட்சம் முதல் ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

மேலும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, சுய உதவிக் குழுக்களுக்கிடையே பாலமாக செயல்பட்டு, அதிக வட்டியில் கடன் வழங்கும் தனி நபர்களின் பிடியிலிருந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களை பாதுகாக்கிறது.

2022-23 ஆம் ஆண்டில் 2,493 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 1,149.89 கோடி ரூபாய் வங்கி பெருங்கடனாக பெற்றுள்ளன.

2021-22 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 20,000 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு அதை விட

அதிகமாக 21,392.52 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

2022–23 ஆம் ஆண்டு வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 25,000 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு அதை விட அதிகமாக 25,022.19 கோடி ரூபாய், 4,39,349 சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு சுய உதவிக் குழுவிற்கான சராசரி கடன் அளவு ரூ.5.68 இலட்சம் ஆகும்.

**சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம்**

ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் திட்டமானது (ISS) கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

- ரூ.3.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு மண்டல கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆண்டுக்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும்.
- ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு மண்டல கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆண்டுக்கு 10% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் (அல்லது வங்கியின் குறைந்தபட்சம் வட்டி விகிதத்தில் (MCLR) எது குறைவோ).

இதுவரை 11,39,861 சுய உதவிக் குழுக்களுக்கு 186.84 கோடி ரூபாய் வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

**சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் முறை**

சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் முறையானது (CBRM) உரிய காலத்தில் கடனை திரும்ப செலுத்துவதற்கும், வாரா கடன் (NPA) ஏதேனும் இருப்பின் அதனை வசூலிப்பதற்கும் சுய உதவிக் குழுக்களுக்கும் வங்கிகளுக்கும் உதவுகிறது. அனைத்து வங்கிக் கிளைகளிலும் கிளை மேலாளர், இவ்வியக்கத்தின் அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழு பிரதிநிதிகளைக் கொண்டு சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் முறை (CBRM) அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினால், 2022-23 ஆம் ஆண்டில், 3,414 வாரா கடன் வசூல் முகாம்கள் நடத்தப்பட்டு, இதில் 18.38 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள்**

சுய உதவிக் குழு குடும்பங்கள் பல்வேறு இடர்பாடுகளால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில், அவர்களை ஒன்றிய மற்றும் மாநில அரசின் காப்பீடு

மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் இணைப்பது அவசியமாகிறது.

இதுவரை, 24.40 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் PMJJBY திட்டத்திலும், 29.05 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் PMSBY திட்டத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். தகுதியான நபர்கள், இறப்பு/விபத்து ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு தொகையினை கண்காணித்து பெற்று வழங்குவதற்கு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர் அடல் பென்சன் யோஜனா (APY) திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை, 14,688 தகுதியான சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அடல் பென்சன் யோஜனா (APY) திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 5.4 கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு அரசுத் துறைகள், அத்துறைகளின் சேவைகள் மற்றும் பலன்களை பெறுவதற்காக உள்ளமைக்கப்பட்ட வழிமுறையைக் கொண்டுள்ளது. ஒருங்கிணைப்பு முயற்சிகள் மூலம்

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் பின்வரும் நான்கு கூறுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன:

**அ. சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு**

நலிவுற்றவர்கள் மற்றும் விடுபட்ட இலக்கு மக்களின் குடும்பங்களை அடையாளம் காணவும், ஒருங்கிணைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், குறிப்பாக நலிவடைந்த நிலையிலுள்ள பழங்குடியினர், பழங்குடியினர் மற்றும் பிற விளிம்புநிலை மக்களைக் கொண்டு சிறப்பு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் சிறப்புத் தேவைகளைக் கண்டறிய, வட்டார அளவிலான தேவைகள் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு, அரசுத் திட்டங்களின் பயன்கள் விளிம்பு நிலை மற்றும் நலிவடைந்த குடும்பங்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

## ஆ. உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW)

வளமான மற்றும் தரமான வாழ்க்கைக்கு முக்கிய தேவைகளான ஆரோக்கியம், சத்தான உணவு மற்றும் சுகாதாரம் போன்றவை உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதார (FNHW) திட்டத்தின் வாயிலாக வலியுறுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள் பின்வருமாறு:

1. நல்ல ஆரோக்கியம், நல்வாழ்வுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.
2. கர்ப்பிணிப் பெண்கள், வளர் இளம் பெண்கள், குழந்தைகளுக்கான தேவை மற்றும் உரிமைகளை பெற வழிகாட்டுதல்கள் அளித்தல்.
3. உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதார செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக பழக்கவழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.

கீழ்கண்ட செயல்பாடுகள் இத்திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

1. **உணவுத் திருவிழா:** 12,525 கிராம ஊராட்சிகளிலும் பாரம்பரிய உணவுப் பழக்கத்தை மீண்டும் கொண்டுவரவும், ஊக்குவிக்கவும் உணவுத் திருவிழாக்கள் நடத்தப்பட்டன.

2. **ஊட்டச்சத்து நிறுவனங்கள்:** உடல் வளர்ச்சி குன்றிய குழந்தைகள் மற்றும் இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆரோக்கியமான உணவை குறைந்த விலையில் கிடைக்கத்தக்க வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் ஊட்டச்சத்து நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

3. **வீட்டு ஊட்டச்சத்து தோட்டம்**: 3,000 கிராம ஊராட்சிகளில் உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்கள் கண்டறியப்பட்டு, இரத்த சோகை உள்ள குடும்பங்களுக்காக வீட்டு ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

## 2022-23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்:

### 1. மக்களை தேடி மருத்துவம் (MTM)

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக தொற்றா நோய்களை கண்டறிவதற்காக அதிக ஈடுபாட்டுடன் கூடிய சுய உதவிக் குழு உறுப்பினர்களை மகளிர் சுகாதார தன்னார்வலராக (WHV) நியமித்து மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புரங்களில் முறையே 8,713 மற்றும் 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் துணை சுகாதார மையங்களுடன் (HSC) இணைக்கப்பட்டு செயல்படுகின்றனர்.

மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் (WHV) தொற்றா நோய்களை கண்டறிந்து, அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல் நாள்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகளை வீடுகளுக்கே சென்று வழங்குகிறார்கள்.

## 2. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (CMBFS):

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவு திட்டம் ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களிலுள்ள அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் மகளிர் சுய உதவிக் குழுவினர் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆரோக்கியமான, தரமான காலை உணவு சுய உதவிக் குழு மகளிரால் தயாரிக்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான சிறப்புக் குழுவால் அடையாளம் காணப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, காலை உணவை சமைப்பதற்கு சமையல் கலை நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. சமையல் கூடத்தின் பொறுப்பாளராக இருக்கும் சுய உதவிக் குழு சமையலர் தினமும் காலை உணவு சமைத்து, உணவு வழங்கப்பட்ட விவரங்களை கைபேசி செயலியில் பதிவேற்றுகிறார்கள். தற்போது இத்திட்டம் கிராமப்புறங்களில் உள்ள 16

மாவட்டங்களில், 963 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

### 3. ஊட்டச்சத்து மாதம் மற்றும் ஊட்டச்சத்து வார கொண்டாட்டம்

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் ஒருங்கிணைந்து சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மார்ச் 2022 மற்றும் செப்டம்பர் 2022 ஆம் மாதங்களில் நடைபெற்ற போஷன் மா மற்றும் போஷன் பக்வாடா பிரச்சாரங்களில் பெருவாரியாக மக்கள் பங்கேற்று இரத்த சோகை, வளர்ச்சி குறைபாடு மற்றும் ஆரோக்கியமான உணவின் முக்கியத்துவத்தை குறித்து குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர்.

### 4. "நம்ம ஊரு சூப்பரு" விழிப்புணர்வு பிரச்சாரம்

"நம்ம ஊரு சூப்பரு" விழிப்புணர்வு பிரச்சாரம் 2022 ஆகஸ்ட் 20 ஆம் தேதி முதல் அக்டோபர் 2 ஆம் தேதி வரை நடத்தப்பட்டு தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டன. இதில் சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுடன், கிராமங்களில் உள்ள சுய உதவிக் குழுவை சார்ந்த பெண்கள், குழந்தைகள், பொது மக்களிடையே தூய்மையான பசுமையான கிராமங்கள் உருவாக்கிட தேவையான மனமாற்றத்திற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கிராமங்களில் உள்ள அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் கிராம ஊராட்சி சேவை மையங்களை சுத்தம் செய்தல் மற்றும் மரக்கன்றுகளை நடுதல் போன்ற விழிப்புணர்வு செயல்பாடுகளில் சுய உதவிக் குழுவை சார்ந்த பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

**இ. பாலின பாகுபாடு – தடுப்பு முயற்சிகள்**

குழந்தை திருமணம், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை போன்றவற்றைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிலும் ஒருவர் 'நம் தோழி' (GPP) என நியமிக்கப்பட்டுள்ளனர். பாலினம் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் ஒவ்வொரு ஊராட்சியிலும், வட்டாரத்திலும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் மற்றும்

வட்டார வள பயிற்றுநர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுதவிர, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 5,718 சமூக செயல்பாட்டுக் குழுக்கள் மற்றும் 180 வட்டார அளவிலான பாலின மன்றங்கள் உருவாக்கப்பட்டு பாலினப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக வலுப்படுத்தப்பட்டு உள்ளன.

**பாலின வன்முறைக்கு எதிரான பிரச்சாரம்**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்காக, பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, ஒரு மாத கால பிரச்சாரம் 23 டிசம்பர் 2022 வரை நடத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் ஒற்றுமை பேரணிகள், குறும்படங்கள், திரைப்படங்கள் திரையிடல், பெண் உரிமை தொடர்பான விவாதங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஈ. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் – சமுதாயம் சார்ந்த அமைப்புகள் (PRI–CBO) ஒருங்கிணைப்பு**

கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான உள்ளாட்சி அமைப்புகளானது பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்துவதிலும் அதற்குரிய

பயனாளிகளை தேர்வு செய்வதிலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, இலக்கு மக்கள் மற்றும் நலிவுற்றோர்களை உள்ளடக்கிய சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாட்டின் இலக்குகளை அடைவதற்காக சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் வழியாக அதன் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது.

**கிராம வறுமை குறைப்பு திட்டம்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளின் ஒருங்கிணைப்பு முயற்சியின் மூலம் அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களும் கூட்டமைப்புகளும் கீழ்கண்ட நான்கு தலைப்புகளின் கீழ் அவர்களுக்கான கிராம வறுமைக் குறைப்புத் திட்டத்தை (VPRP) தயாரிக்கக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது:

1) உரிமைத் திட்டம்
2) வாழ்வாதாரத் திட்டம்
3) பொது பொருட்கள் மற்றும் சேவைகள் திட்டம்

4) சமூக மேம்பாட்டுத் திட்டம்

2022-23 ஆம் ஆண்டில், கிராம வறுமை குறைப்புத் திட்டம் 12,524 கிராம ஊராட்சிகளிலும் தயாரிக்கப்பட்டு, கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்துடன் (GPDP) ஒருங்கிணைத்து கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## 5.5 வாழ்வாதார மேம்பாடு

ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழு குடும்பங்களின் தொடர் மற்றும் நிலையான வருமானத்தை உறுதிப்படுத்த, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்வதை வாழ்வாதார இயக்கம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைக்கும் வகையில் ஒவ்வொரு சுய உதவிக் குழுவின் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார முயற்சிகள் பரந்தளவில் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

i) பண்ணை நடவடிக்கைகள்

ii) பண்ணை சாரா நடவடிக்கைகள்

iii) சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள்

## அ. பண்ணை வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகள்

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகள், பயிர் உற்பத்தி, முதல் நிலை மதிப்புக் கூட்டுதல் மற்றும் மதிப்புச் சங்கிலி மேலாண்மை ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகின்றன. இவ்வியக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளால் சுய உதவிக் குழுவை சேர்ந்த வேளாண் மகளிர், விவசாயத் தொழிலாளர்களாக இருந்து பயிர் சாகுபடியாளராகவும், விவசாய தொழில் முனைவோராகவும் மிக வேகமாக முன்னேறி வருகின்றனர்.

இதுவரை பல்வேறு பண்ணைசார் வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் 2,84,613 மகளிரின் வருமானம் உயர்ந்து அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பண்ணை சார்ந்த வாழ்வாதார செயல்பாடுகள் கீழ்க்கண்ட அட்டவணையின்படி பல்வேறு கட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டன.

## அட்டவணை எண். 4

| ஆண்டு | மாவட்டம் | வட்டாரம் |
|---|---|---|
| 2016–17 | 7 | 7 |
| 2017–18 | 10 | 15 |
| 2018–19 | 9 | 29 |
| 2019–20 | 30 | 65 |
| 2020–21 | 25 | 29 |
| 2021–22 | 36 | 49 |
| 2022–23 | 26 | 47 |
| **மொத்தம்** | | **241***|

* ஊரக பகுதிகளில் உள்ள 388 வட்டாரங்களில், 241 வட்டாரங்கள் பல்வேறு ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 120 வட்டாரங்களில் வாழ்ந்து காட்டுவோம் திட்டமும், 20 வட்டாரங்க**ளில்** தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டமும் மற்றும் 7 நகரமயமான வட்டாரங்களாக உள்ள**து**.

இவ்வட்டாரங்களில், பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த வாழ்வாதார செயல்பாடுகளின் கீழ் பயிற்சி வழங்குதல், குழுக்கள் உருவாக்குதல் மற்றும் தொகுப்பு நடவடிக்கைகள் மூலம் சிறந்த பண்ணை செயல்பாடுகளை மேற்கொண்டு அதிக மகசூல் மற்றும் உரிய விலை

பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தரிசு நிலங்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகப்படுத்துவதற்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் முதன்மைத் திட்டமான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து தொகுப்பு அணுகுமுறை மூலம் இந்நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகிறது.

**உற்பத்தியாளர் குழுக்கள்**

ஒரே வகையான பயிர் சாகுபடியில் ஈடுபட்டு ஒரே மாதிரியான வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சந்திக்கும் விவசாயிகளின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்காக குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2.00 இலட்சம் செயல்பாட்டு மூலதனம் மற்றும் உட்கட்டமைப்பு உதவிக்காக துவக்க நிதியாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு, புதிய விவசாய சம்பந்தமான தொழிநுட்பங்கள், சிறந்த செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் குறித்த பயிற்சியும் வழங்கப்படுகிறது. தொழில் மேம்பாட்டிற்கான ஆதரவும் வழங்கப்படுகிறது. இதுவரை மாநிலத்தில் 11,597 உற்பத்தியாளர் குழுக்கள்

உருவாக்கப்பட்டு, உயர்மட்ட செயல்பாடுகளுக்காக ஒருங்கிணைக்கப்படுகின்றன.

## ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகளை ஒத்திசைவுடன் சீரமைக்கும் முறையின் பலனை பெறுவதற்காக, விவசாயம் சார்ந்த பண்ணை நடவடிக்கைகள் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. இதில், உயிர் உரம் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவுகள் குறைக்கப்பட்டு பல்வேறு வருமானம் ஈட்டும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. 2 முதல் 3 கிராம ஊராட்சிகளிலிருந்து, 250 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு தொகுப்புக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் வாழ்வாதார சேவை மையம் அமைக்கவும், கால்நடைகள் வாங்கவும், ஊடுபயிர்கள் பயிரிடவும், இயற்கை இடுபொருட்கள் அலகு அமைக்கவும், இயந்திர வாடகை மையம் ஏற்படுத்தவும், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக குறியீடு உருவாக்குவதற்கான பயிற்சிகள் அளித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகிறது.

இதுவரை 185 ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள் (TNSRLM–171, NRETP–14) ஒருங்கிணைந்த அணுகுமுறையின் பலனை பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

**இயற்கை வேளாண் தொகுப்புகள்**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு, இயற்கை வேளாண் தொகுப்புகளை உருவாக்குவதன் மூலம் வேளாண்–சூழலியல் நிலைக்கு உகந்த விவசாய முறை மற்றும் இரசாயனங்கள் இல்லாத இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி செய்யப்படும் பாரம்பரிய விவசாயத்திற்கு புத்துயிர் அளிக்க முயற்சிக்கப்படுகிறது.

இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள அடுத்தடுத்த கிராமங்களைச் சேர்ந்த 50 விவசாயிகள் கொண்ட இயற்கை விவசாய தொகுப்பிற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பதிவு செய்தல், சான்றிதழ்கள் பெறுதல் மற்றும் இயற்கை இடுபொருள் அங்காடி அமைப்பதற்காக ரூ.6.00 இலட்சம் வழங்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் அதிக மதிப்புள்ள இயற்கை விளைபொருட்களை உற்பத்தி செய்ய ஒருங்கிணைந்த பண்ணை முறையும் உருவாக்கப்படும்.

இதுவரை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 212 இயற்கை வேளாண் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிதாகத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு இயற்கை வேளாண்மைக் கொள்கை 2023-ன் கீழ் பயன்பெறும் வகையில் இயற்கை வேளாண்மை தொகுப்புகள் மேம்படுத்தப்படும்.

**கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டத்துடன் (2022-23) ஒருங்கிணைப்பு**

- 3,500 முருங்கை நாற்றங்கால்கள், 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் மற்றும் 37 வட்டார நாற்றங்கால்களும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்திட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் திட்ட செயலாக்க முகமைகளாக செயல்படுகின்றன.
- 10 பன்றி வளர்ப்பு அலகுகள், 14,720 கோழி வளர்ப்பு அலகுகள் மற்றும் 2,944 ஆடு வளர்ப்பு அலகுகளும் ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகளின் கீழ் வேளாண் மகளிரால் அமைக்கப்பட்டுள்ளன.

- பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 47 பூச்சிக்கொல்லி அற்ற மற்றும் இயற்கை இடுபொருள் அங்காடிகள் வட்டார அளவில், வட்டார தலைமை இடங்களில் அமைக்கப்படுகிறது.
- பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கவும் கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கவும் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தீவன பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- புரதச்சத்து நிறைந்த உணவை கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் வழங்குவதற்காக 7,316 அசோலா வளர்ப்பு அலகுகள் அமைக்கப்பட்டு 1,472 ஊராட்சிகளைச் சார்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கால்நடைகளுக்கான பாரம்பரிய வைத்தியப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் பெருமளவில் வேளாண் பணிகளில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் பண்ணை நிலங்களில் எளிதாக பண்ணை வேலைகளை செய்வதை ஊக்குவிப்பதற்காகவும், வேலைப் பளுவை குறைக்கவும், மகளிரால் எளிதில்

இயக்கப்படும் 736 வேளாண் கருவி வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- 1,300 உறுப்பினர்களைக் கொண்ட 50 தொகுப்புகள், முருங்கையிலிருந்து மதிப்பு கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ளன.
- சிறுதானியம் மிகுந்த அளவில் சாகுபடி செய்யும் 12 மாவட்டங்களில் 800 வேளாண் மகளிரைக் கொண்ட 100 தொகுப்புகள் 200 ஏக்கர் மானாவாரி நிலத்தில் சிறுதானிய சாகுபடி செய்து உற்பத்தி பெருகியுள்ளது.
- 46 தொகுப்புகளில் 500 வேளாண் மகளிரைக் கொண்டு 94 அலகுகளில் காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
- 2,350 வேளாண் மகளிரைக் கொண்டு தேனீ வளர்ப்பை வாழ்வாதார நடவடிக்கையாகவும் மற்றும் மகரந்தச் சேர்க்கையை ஊக்குவிப்பதற்காகவும் உரிய பயிற்சி வழங்கி 47 தொகுப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது.

## சர்வதேச சிறுதானிய ஆண்டு – 2023

2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது மாநிலம் சிறுதானிய சாகுபடியில் பெரும்பங்கு வகிக்கின்றது. சிறுதானியங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதால் அவை ஊட்டச்சத்து நிறைந்த தானியங்கள் என உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சிறுதானிய உற்பத்திக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக வேளாண்மைத் துறையுடன் இணைந்து உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பது, சிறுதானிய உணவை உண்பதால் ஏற்படும் ஆரோக்கிய நன்மைகள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் புதிய சிறுதானிய பொருட்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டை 'மகளிர் மற்றும் சிறுதானியம்' என்ற தலைப்பில் கொண்டாடப்பட உள்ளது.

சிறுதானிய பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மாநிலம், மாவட்டம், வட்டாரம் மற்றும் ஊராட்சி அளவில் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்கங்கள் நடத்தவும், பொதுமக்கள்

பயன்பெறும் வகையில் உள்ளூரில் விளையக்கூடிய சிறுதானியங்களை கண்காட்சிகள் மூலம் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கல்லூரி மற்றும் பள்ளிக் குழந்தைகள் மத்தியில் சிறுதானிய பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கல்லூரி சந்தைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மேலும், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்திட சாலையோர நிகழ்ச்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் மாநிலத்தின் முக்கிய சுற்றுலா தலங்களில் சிறுதானிய நேரடி சமையலறைகள் நடத்திட ஏற்பாடு செய்யப்படும்.

**ஆ. பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள்**

பண்ணை அடிப்படையிலான வாழ்வாதார நடவடிக்கைகள் குறிப்பிட்ட காலநிலையை சார்ந்துள்ளதால், காலம் தவறிய பருவமழை மற்றும் அதன் வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலையான வருமானத்தை உறுதி செய்யவும் மற்றும் வருமானத்தை பெருக்கவும் பல்வேறு பண்ணை சாரா தொழில்கள் ஊக்குவிக்கப்படுகிறது.

பண்ணை சாரா முயற்சிகளில் உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளின் கீழ்க்கண்ட செயல்பாடுகள் அடங்கும்:

1. குறு நிறுவன மேம்பாடு

2. தொகுப்பு மேம்பாடு – கைவினைஞர் & துறை சார்ந்த தொகுப்புகள்

## குறு நிறுவன மேம்பாடு

குறு நிறுவனங்களின் முன்னேற்றமானது, தேவையின் அடிப்படையில் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி வழங்கி, முதலீட்டிற்கான வங்கி இணைப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் மூலம் உறுதி செய்வதாகும். சமுதாய வல்லுநர்கள் மூலம் புதிய நிறுவனங்கள் மற்றும் பழைய தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வணிக திட்ட அறிக்கை, சந்தை நுண்ணறிவு, சட்டபூர்வ தீர்வுகள், உரிமம் மற்றும் தரப்படுத்துதலுக்கு வழி வகை செய்யப்படுகிறது.

## தொகுப்பு மேம்பாடு

தொகுப்பினை உருவாக்குவதால் உற்பத்தி செலவுகள் குறைந்து இலாப வரம்பு அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நிலை உயருகிறது. இத்தொகுப்பு முறையானது, ஊரகப் பகுதிகளில் உற்பத்தி பொருட்களை ஒருங்கிணைத்தல், தரம் பிரித்தல், மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தை

வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல் ஆகிய செயல்களுக்கு ஆதரவு அளிக்கிறது. பொது சேவை மையத்தினை நிறுவுவதன் மூலம், உற்பத்தி பொருட்களின் தரம் பிரிக்கவும், பேக்கேஜிங் மற்றும் "மதி" என்ற பெயரில் வணிக குறியீட்டை ஏற்படுத்தி விற்பனை செய்ய உதவுகிறது.

**(அ) கைவினைஞர் தொகுப்புகள்**

**(கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள்)**

ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள், பாரம்பரிய தொழில்களான கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் குறு தொழில் நிறுவன குழுக்களை உருவாக்கி தொகுப்பு அமைக்கப்படும். இத்தொகுப்புகளை அமைப்பதன் மூலம் அவர்களுக்குள் அனுபவ பரிமாற்றத்திற்கு உதவுகிறது மற்றும் புதிய தொழில்நுட்ப முயற்சிகளை பயன்படுத்துவதன் மூலம் வடிவமைப்பு, தரம் மற்றும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துகிறது.

**(ஆ) துறை சார்ந்த தொகுப்புகள்**

**(ஆடைகள், சணல் போன்றவை)**

ஒரு குறிப்பிட்ட பகுதியை சேர்ந்த குறு நிறுவனங்கள் ஒரே மாதிரியான மூலபொருள் அல்லது முடிவுற்ற பொருட்களைக் கொண்டு ஒரே மாதிரியான உற்பத்தி பொருட்களை தயாரிக்கும்

பணியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்து துறைசார் தொகுப்புகளாக அமைக்கப்படுகிறது. இத்தொகுப்புகள் புதிய தயாரிப்புகளை வடிவமைக்க அவர்களது அறிவுத்தளத்தை விரிவுபடுத்துவதன் மூலம் புதிய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி தருகிறது.

**உணவு பதப்படுத்தும் செயல்பாடுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு வழங்குதல்**

பண்ணை சாரா வாழ்வாதார தொழில்களில் பெரும்பாலான சுய உதவிக் குழு மகளிர் உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் தொழிலை வீட்டளவில் குறைந்த முதலீட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் உணவு சார்ந்த உற்பத்தி தொழில்களை மேம்படுத்துவதற்கு PMFME திட்டத்தின் கீழ் நுண், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஆதார நிதி 40,000 ரூபாயை சுய உதவிக் குழு தொழில்முனைவோருக்கு பெற்றுத் தருவதற்கு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022–23 ஆம் ஆண்டில், 5,359 சுய உதவிக் குழு பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் 96.13 கோடி ரூபாய் பயன்பெற்றுள்ளனர்.

**இ. சுய உதவிக் குழு தயாரிப்புகளை சந்தைப்படுத்தல்**

ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் குழுவினரால், உற்பத்தி செய்யப்படும் பல வகையான பொருட்களுக்கு உள்ளூர் சந்தையில் குறைந்த அளவிலான விற்பனை வாய்ப்புகளே உள்ளது. ஆனால் நகர்ப்புரங்களில் இதற்கான தேவை மிகுதியாக உள்ளது.

சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களின் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, சந்தைக்குரிய நுண்ணறிவு மற்றும் ஆய்வு, பொருட்களை வகைப்படுத்துதல், உற்பத்தி பட்டியல் தயாரித்தல், பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் போன்றவற்றை மேம்படுத்துதல், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திட பல்வேறு நிலைகளிலான கண்காட்சிகள், விற்பனை அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொங்கல் பண்டிகையின்போது இயற்கை முறையில் விளைவித்த மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த உற்பத்திப் பொருட்களை கொண்ட பரிசு பெட்டகங்கள் விற்பனை செய்யும் முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கமானது பிரத்தியேகமான பரிசு பெட்டகங்களை தயாரித்து விற்பனை செய்கிறது.

**'பூமாலை வணிக வளாகங்களை' புதுப்பித்தல்**

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புகளை வழங்கும் வகையில் மாவட்ட தலைமையகங்களில் உள்ள நகரத்தின் பிரதான இடங்களில் பூமாலை வணிக வளாகம் அமைக்கப்பட வேண்டும் என்பது முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சிந்தனையில் உதித்ததே ஆகும்.

மாவட்டம் முழுவதும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மையமாக பூமாலை வணிக வளாகங்கள் செயல்படுகிறது. சந்தை நுண்ணறிவைப் பெறுவதற்கு மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் கண்காட்சிகளுக்கான பொருட்களைத்

தேர்ந்தெடுப்பதிலும் இம்மையங்கள் முக்கிய அங்கம் வகிக்கிறது.

2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் அனைத்து மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள் ரூ.6.16 கோடி செலவில் ஒரே வண்ணம் பூசப்பட்டு, புனரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கண்காட்சிகள் மற்றும் மேளாக்கள்**

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் சந்தை வாய்ப்பை அதிகரித்தல் மற்றும் வாங்குவோர்களை தொடர்ந்து ஈர்க்கும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

2022–23 ஆம் ஆண்டில், 124 கண்காட்சிகளில் 3,511 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ.3.65 கோடி மதிப்புடைய பொருட்களை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்.

**மதி விற்பனை அங்காடி மற்றும் மின் வண்டிகள்**

சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நகர்ப்புரம் மற்றும் சுற்றுலா

தலங்களில் தொடர்ந்து தேவை அதிகரித்து வருகிறது. எனவே, சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு மாநிலம் முழுவதும் விற்பனை அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் நலிவுற்றோரின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை உயர்த்தும் வகையில் அதிக இடங்களுக்கு சென்று பெருமளவில் விற்பனை செய்திடும் வகையில் மின் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, 134 மதி விற்பனை அங்காடி மூலம் சுய உதவிக் குழுக்களின் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இம்மதி விற்பனை அங்காடிகளின் விற்பனை பரிவர்த்தனைகளை மின்னணுமயமாக்க, ஒரு வலைதளம் மற்றும் கைபேசி செயலி வடிவமைக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

**மின்னணு வர்த்தகத்தை ஊக்கப்படுத்துதல்**

சந்தை பொருளாதாரமானது மின்னணு வர்த்தகத்தை நோக்கி பயணிக்கும் இக்கால கட்டத்தில், இணையதள வர்த்தகத்தின் மூலம் நுகர்வோரை நேரடியாக சென்றடையவும்,

சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை விரிவுபடுத்திடவும், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திடவும் ஏதுவாக ஒரு தனிப்பட்ட மின்னணு வர்த்தக இணையதளம் தொடங்கப்படும்.

## 5.6. இளைஞர்களுக்கான திறன் பயிற்சி

சந்தையின் தேவைக்கேற்ப கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்தி அதன் மூலம் வேலைவாய்ப்பை பெறுவதே திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளின் முக்கிய நோக்கமாகும். வேலைவாய்ப்புச் சந்தையில் தேவையின் அடிப்படையில் இளைஞர்களின் ஆர்வம், திறன் மற்றும் தகுதியை கண்டறிந்து அதற்கு பொருத்தமான திறன் பயிற்சியை வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

### இளைஞர் திறன் திருவிழாக்கள் (YSFs)

நமது மாநிலத்தில் படித்த, வேலை தேடும் இளைஞர்கள் பெருமளவில் உள்ளனர். இவர்களின் திறன்களை உயர்த்துவதற்கு பல்வேறு திட்டங்கள் உள்ளபோதிலும், அவர்களுக்கு எந்த வேலைக்கு எத்தகைய திறன் தேவை உள்ளன, அதற்கான பயிற்சி திட்டங்கள் குறித்தும் அறியாமல் உள்ளனர். இதன் அவசியத்தை உணர்ந்து, ஒன்றிய மற்றும்

மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்கள் குறித்து 2022–23 ஆம் ஆண்டில் 388 வட்டாரங்களிலும் கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இளைஞர் திறன் திருவிழா நடத்திட தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் போன்ற பிற துறைகளின் பங்கேற்புடன் நடத்தப்படுகிறது. இத்தகைய திறன் திருவிழாக்கள் மூலம் கிராமப்புற இளைஞர்கள் ஒன்று திரட்டப்பட்டு திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுடன் நேரடியாக சந்திப்பதற்குரிய பொதுத்தளத்தை உருவாக்கி அதன் வாயிலாக இளைஞர்களின் முன்னுரிமை மற்றும் திறன் தேவையின் அடிப்படையில் பொருத்தமான திறன் பயிற்சி திட்டங்களை தெரிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

2022–23 ஆம் ஆண்டில், 55,107 இளைஞர்கள், இளைஞர் திறன் திருவிழாக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு அரசு திறன் திட்டங்களில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

**வேலைவாய்ப்பு முகாம்கள்**

திறன் பயிற்சி பெற்ற மற்றும் படித்த இளைஞர்களுக்கு தனியார் துறைகளில் வேலை

வாய்ப்புகளை வழங்குவதற்காகவும் அவர்களின், தேவை மற்றும் சந்தை வாய்ப்புகளை பொருத்தும் வகையிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்கும் நிறுவனங்களின் விவரங்கள், காலி பணியிடங்கள், பணிகளுக்கான தகுதி, முகாம் நடைபெறும் தேதி மற்றும் இடம் போன்ற தகவல்கள் பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாக கிராமப்புற இளைஞர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் 2022–23 ஆம் ஆண்டில் 36 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 28,417 இளைஞர்கள் வெவ்வேறு தொழில் நிறுவனங்களில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

**ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)**

கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை உருவாக்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட முன்னோடி வங்கிகள் வாயிலாக ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (Rural Self Employment Training Institute – RSETIs) அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் தற்பொழுது 30 மாவட்டங்களில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள்

செயல்பட்டு வருகின்றன. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் துவங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி நிறுவனங்களுக்கான உட்கட்டமைப்பு நிதியும் கிராமப்புற ஏழைக் குடும்பங்களை சார்ந்த நபர்களுக்கு பயிற்சிக்கான செலவினத்தை ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது.

2022–23 ஆம் நிதியாண்டில் 26,259 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதில், 10,978 நபர்கள் வங்கி கடன் மற்றும் சொந்த முதலீடு மூலம் சுய தொழில் செய்து வருகின்றனர்.

### 5.7 விருதுகள்

### சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள்

சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் 2006–07 ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த "மணிமேகலை விருதுகள்" பின்னர் நிறுத்தப்பட்டது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் 2021–22 ஆம் ஆண்டு முதல் மணிமேகலை

விருதுகள் மீண்டும் வழங்கப்படுகிறது. அரசியல் மற்றும் சமூக–பொருளாதார மேம்பாட்டில் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பங்களிப்பை அங்கீகரித்து பாராட்டும் வகையில் சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், நகர அளவிலான கூட்டமைப்பு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு விருதுகள் வழங்கப்படுகிறது. மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு ரொக்க விருதுகள் மற்றும் சான்றுகள் வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டிற்கான "மணிமேகலை விருதுகள்" 29.12.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மொத்தம் ரூ.55 இலட்சம் ரொக்க பரிசுடன், சான்றிதழ் மற்றும் பரிசு கோப்பைகள், 19 சுய உதவிக் குழுக்களுக்கும், 5 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கும், 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஒரு வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கும், 2 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் மற்றும் ஒரு நகர அளவிலான கூட்டமைப்பிற்கும் வழங்கப்பட்டன.

## சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கான விருதுகள்:

வங்கிகளுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்குவதன் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அதிக நிதி உதவிகள் வழங்க வங்கியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக செயல்படும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கான விருதுகள் அரசால் நிறுவப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டிற்கான வங்கியாளர்கள் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.12.2022 ல் வழங்கப்பட்டது.

## 2023-24 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள்

- 'மதி சிறகுகள் தொழில் மையம்' மகளிர் தொழில் முனைவோரின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களின் (SVEP, TNSRLM, NRETP and VKP 2.0) வாயிலாக ஓரிட சேவை மையங்கள் வெவ்வேறு பெயர்களில் (BRC, BBRC, OSF) அமைந்திருந்தது. தற்போது இவை அனைத்தும் 'மதி சிறகுகள் தொழில் மையம்' என்ற பொதுவான பெயராக மாற்றம் செய்யப்படும். இம்மையத்தில் சேவைகள் வழங்குவதற்கு

நிலையான செயல்முறை வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) வகுக்கப்படும்.

- கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்துடன் கிராம வறுமை குறைப்பு திட்டத்தை ஒருங்கிணைத்து மற்ற துறைகளின் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் தற்பொழுது செயல்பாட்டில் உள்ள பல்வேறு கைபேசி செயலிகள் மற்றும் தளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே தளத்தில் செயல்படுவதற்கு கைபேசி செயலி உருவாக்கப்படும்.

- தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU–GKY) திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு தகுதியான பணியமர்வையும் மற்றும் அவர்களை தொடர்ந்து பணியில் தக்க வைக்கவும் தொழில்துறை மண்டலங்களில் இரண்டு இடம்பெயர்வு ஆதரவு மையங்கள் நிறுவப்படும்.

- கிராமப்புறங்களில் சிறப்பு கவனம் செலுத்தி தொழில் நிறுவனங்களின் திறன் தேவையை

மதிப்பிடுவதற்கும், அளவிடுவதற்கும் மற்றும் தொழில் மற்றும் சந்தை தொடர்பான திறன் பயிற்சிகளை வழங்குவதற்கும் பொருத்தமான பயிற்சி நிறுவனங்களை கண்டறிவதற்கும் மாநில அளவிலான விரிவான திறன் இடைவெளி ஆய்வு மேற்கொள்ளப்படும்.

# 6. தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்

## 6. தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் நோக்கமானது பல்வேறு நிலையிலான வேறுபட்ட செயல்பாடுகளை செயல்படுத்துவதாகும். வட்டார அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்புக்கூட்டு வளர்ச்சியை மேம்படுத்துதல், தனி நபர் தொழில் மற்றும் தொகுப்புத் தொழிலகங்களை பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா பிரிவின் கீழ் அமைத்தல், தொழில் திறன் மேம்பாடு மற்றும் நிதி சேவைகளுக்கான மாற்று திட்டத்தை விரிவுபடுத்துதல் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான முயற்சிகளை உருவாக்குவதே ஆகும். உலக வங்கியானது இந்த திட்டத்திற்காக ஒன்றிய அரசுக்கு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விகிதத்தில் நிதிப்பகிர்வு வழங்குகிறது.

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் 2019–20 ஆம் ஆண்டிலிருந்து திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## முக்கிய செயல்பாடுகள்

- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பை உருவாக்கி வலுப்படுத்துவதன் மூலம் இது மற்ற வட்டாரங்களுக்கு ஒரு முன்மாதிரி வட்டாரமாக இயங்கும்.
- சமுதாய மக்களின் திறன் மேம்பாட்டிற்காக சமுதாய மேலாண்மை பயிற்சி மையம் உருவாக்கப்படுகிறது.
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மின்னணு நிதி சேவை பயன்பாடுகளான IMPS, UPI மற்றும் Bank PoS Machine குறித்த பயிற்சி வழங்குதல்.
- பெண்கள் புதிதாக தொழில் தொடங்குவதற்கும், ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் ஏதுவாக ஒரே இடத்தில் அதற்குரிய வசதிகளை பெறுவதற்காக மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

## 6.1 மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு

வட்டார அளவிலான கூட்டமைப்பினை இரண்டாம் நிலை கூட்டமைப்பாக வலுப்படுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு

அணுகுமுறையை பின்பற்றுகிறது. இத்திட்டத்தின் மூலம் வட்டார அளவிலான கூட்டமைப்பினை வலுப்படுத்தி, அவற்றை சுயமாகவும் தன்னிறைவு பெற்ற நிதியமைப்பாகவும் மாற்ற திறன் மேம்பாடு வழங்கப்படும். இம்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பானது, பிற வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் திறனை மேம்படுத்துவதற்கு மாதிரி தளமாக அமைகிறது. வட்டார அளவிலான கூட்டமைப்பு, அவர்களின் உறுப்பினர்களின் தேவைகளை புரிந்து கொள்வதற்கும், அவர்களுக்கு தேவையான சேவைகள் மற்றும் தயாரிப்புகளை வடிவமைத்து வழங்குவதற்கும் தொலைநோக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## 6.2 மின்னணு பண பரிவர்த்தனை

மின்னணு பண பரிவர்த்தனை என்பது ஒரு மின்னணு சாதனத்தின் உதவியுடன் தனி நபர்கள் பணம் செலுத்தவும், பணம் பெறவும் வழிவகுக்கிறது. விளிம்பு நிலை மற்றும் விடுபட்ட மக்கள் நிதி சேவைகளை மின்னணு மூலமாக எளிதாக அணுக பயிற்சி வழங்க இத்திட்டம் வழி வகுக்கிறது. சான்றளிக்கப்பட்ட சுய உதவிக்குழு உறுப்பினர்கள் வங்கி வணிக தொடர்பாளராக (BC Sakhi) ஈடுபடுத்தப்பட்டு சுய உதவிக்குழு

உறுப்பினர்களிடையே மின்னணு பண பரிவர்த்தனை சேவைகளை வழங்கி வருகின்றனர்.

## 6.3 இரட்டை அங்கீகாரத்திற்கான முன்னோட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளின் வங்கிக் கணக்குகள் (அதாவது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டு கையொப்பங்களுடன் இயக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையொப்பத்தை சரிபார்க்கும் முறை இல்லாததால், மகளிர் சுய உதவிக் குழுக்களால் வங்கி வணிக தொடர்பாளரிடமிருந்து பணம் பெறவோ அல்லது அனுப்பவோ இயலாத நிலை உள்ளது. எனினும், அவர்கள் வங்கி வணிக தொடர்பாளர்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களின் வங்கி கணக்குகளில் பணம் செலுத்தலாம். சுய உதவிக் குழுக்களின் வங்கி சேமிப்பு கணக்குகள் வங்கி வணிக தொடர்பாளரிடம் இணைக்கப்பட்டு சோதனை அடிப்படையில் "இரட்டை அங்கீகாரம்" என்ற முறையினை அறிமுகப்படுத்த முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

# 7. தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

## 7. தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU – GKY) என்பது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடையே 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்டு ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள இளைஞர்களுக்கான திறன் பயிற்சி அளிக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்க முகமைகள் மூலம் பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தபட்சம் 70% பணியமர்வு அளிக்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திட்டம் சமூகத்தில் பின் தங்கிய பிரிவினர்களான தாழ்த்தப்பட்ட வகுப்பினர் – 62%, பழங்குடியினர் – 3%, சிறுபான்மையினர் – 16%, மாற்றுத் திறனாளிகள் – 3% மற்றும் மகளிர் – 33% (அனைத்து பிரிவுகளும் சேர்த்து) பயன்பெறும் விதமாக கட்டாய சமூக உள்ளாக்கத்தை கொண்டுள்ளது. பயிற்சிக்குரிய பாடத்திட்டமானது

தேசிய திறன் தகுதி கட்டமைப்புடன் (National Skill Qualification Framework – NSQF) இயைந்த ஒன்றாகும். மேலும், தொழில் பாடத்துடன் மென்திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணிணி அறிவு ஆகிய பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி முடிக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கிறது.

2022–23 ஆம் ஆண்டில், 20,309 இளைஞர்கள் பயிற்சியில் கலந்து கொண்டு, அதில் 14,303 இளைஞர்கள் பயிற்சி முடித்து, 6,997 இளைஞர்கள் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

## 7.1 திறன் மற்றும் வாழ்வாதார அழைப்பு மையம்

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU–GKY) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறன் பயிற்சிகள், திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகள் ஆகியன குறித்த இளைஞர்களின் ஐயங்களை தீர்ப்பதற்காக அழைப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்பு மையம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் சுய உதவிக்குழுக்களுக்காக செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் குறித்த

சந்தேகங்களையும் கையாளும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாழ்வாதார உதவி அழைப்பு மையம் **155330** என்ற குறு எண்ணுடன் செயல்பட்டு வருகிறது.

## 7.2 பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து ஆங்கிலம் மற்றும் மென் திறன் பயிற்சி

ஆங்கிலம் மற்றும் மென் திறன் பயிற்சிகள் அனைத்து திட்ட செயலாக்க முகமைகளிலும் ஒரே சீராக பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் "ஆங்கிலம் மற்றும் மென் திறன்களுக்கான பாடத்திட்டங்களை தரப்படுத்துதல்" எனும் திட்டத்தை துவங்கியுள்ளது. இதற்காக பிரிட்டிஷ் கவுன்சில் தொழில்நுட்ப சேவை நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறன் மேம்படுத்தப்பட்டு, அவர்களுக்கான வேலை கிடைக்கக் கூடிய சாத்திய கூறுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# 8. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

## 8. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புர ஏழைகளைக் கொண்டு சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதும், இலாபகரமான சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புகளை பெறுவதற்கான வழிவகை செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவது ஆகும். மேலும், நகர்ப்புர உறைவிடமற்றோருக்கு தேவையான உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல் மற்றும் நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார சிக்கல்களுக்கு தீர்வுகாண கடன் இணைப்பு மற்றும் இதர சேவைகளை வழங்குவதை இவ்வியக்கம் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) தொடங்கப்பட்ட 2014–15 ஆம் ஆண்டு முதல், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வந்தது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் பல்வேறு வாழ்வாதாரம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதில் மிகுந்த அனுபவம் கொண்டுள்ளதால் இதனைக் கருத்தில் கொண்டு,

மாநில அரசு அனைத்து வாழ்வாதார இயக்கங்களையும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு குடையின் கீழ் கொண்டு வர முடிவு செய்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் 2016–17 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு முதல் 1,16,904 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு முன் அமைக்கப்பட்ட 12,817 சுய உதவிக் குழுக்கள் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, தற்போது மாநில அளவில் 1,29,721 நகர்ப்புர சுய உதவிக் குழுக்கள் உள்ளன.

### 8.1. திட்டக் கூறுகள்

### 1. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், சமூக ஒருங்கிணைப்பு மூலம் ஒட்டுமொத்த நகர்ப்புர ஏழைகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரை சுய உதவிக்குழு மற்றும் கூட்டமைப்புக்குள் கொண்டு வருவதை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர ஏழை மற்றும் நலிவடைந்த பிரிவினர், குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மகளிரைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைப் பெண்கள், இடம் பெயர்ந்து வந்த தொழிலாளர்கள், மிகவும் நலிவுற்றோர், தெருவோர வியாபாரிகள், குப்பை சேகரிப்பவர்கள், வீட்டுவேலை செய்பவர்கள் மற்றும் கட்டிடத் தொழிலாளர்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைப்பதில் அதீத அக்கறை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அ) சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்:**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்ட பிறகு பயிற்சி வழங்கப்பட்டு 3 மாதங்கள் முடிவடைந்த பின்பு சமூக மதிப்பீட்டின் அடிப்படையில் அக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படுகிறது. இதன் மூலம் குழுவின் மூலதன நிதியை உயர்த்துவதற்கும், உறுப்பினர்களுக்கு உட்கடன் வழங்குவதை அதிகப்படுத்துவதற்கும் வங்கிக் கடன் பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது.

இதுவரை 14.32 இலட்சம் நகர்ப்புர ஏழை குடும்பங்களைக் கொண்டு 1.30 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதில் 1.26 இலட்சம் குழுக்களுக்கு மொத்தம் 126.00 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2022–23 ஆம் ஆண்டில் 20,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 17,615 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 17.61 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ) பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்:**

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்தபட்சம் 10 சுய உதவிக் குழுக்களை குடியிருப்பு / வார்டு அளவில் ஒருங்கிணைத்து ஏற்படுத்தப்படுகிறது. பகுதி அளவிலான கூட்டமைப்புகள், முறையான வட்டி விகிதத்தில் உரிய நேரத்தில் கடன் பெற வழிவகை செய்தல், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் நகர்ப்புர தூய்மை இந்தியா இயக்கத்தில் பங்கேற்றல் போன்ற முக்கியமான செயல்பாடுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு வழிகாட்டியாய் இருந்து செயல்படுகிறது.

இதுவரை 44,477 சுய உதவிக் குழுக்களைக் கொண்டு 2,633 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு, 2,383 கூட்டமைப்புகளுக்கு 11.92 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டில் **500** பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு, **271** கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதியாக **1.36** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**இ) நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்:**

பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இந்நகர அளவிலான கூட்டமைப்பின் கீழ்வரும் பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு அடுத்த கட்ட முன்னெடுப்புகள் தேவைப்படும் போது தீர்வு காண வழிகாட்டும் அமைப்பாகவும் செயல்படுகிறது.

**ஈ) நகர்ப்புர வாழ்வாதார மையங்கள்:**

இம்மையங்கள் அனைத்து நகர வாசிகளுக்கு முறைசாரா துறைகளில் தேவையான சேவைகளை வழங்குவதற்கும், மேலும், நகர்ப்புர ஏழைகள் அவர்களது உற்பத்தி பொருட்கள் மற்றும்

சேவைகளை சந்தைப்படுத்துவதற்கும் தேவையான தகவல்கள் மற்றும் பயன்களைப் பெறுவதற்கும் அடித்தளமாக அமைவதுடன் ஓரிட வணிக மையமாகவும் (One–Stop Shop) செயல்படுகிறது. நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்புகள் குறித்து உரிய தகவல் வேண்டுபவர்களுக்கு உதவும் ஆதார வள மையமாகவும் திகழ்கிறது.

இதுவரை மாநில அளவில் 80 நகர வாழ்வாதார மையங்கள் 8.00 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2. வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம் (ESTP)

நகர்ப்புர ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்கள் சுய தொழில் அல்லது ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை பெறுவதற்கான திறனை வளர்ப்பது மற்றும் மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகள், வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 30 சதவிகித மகளிர் பயிற்சி பெற வேண்டும். நகரப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினர் பயன்பெறுவர். இத்திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மையினர் மற்றும் நலிவுற்றோர் பிரிவைச் சார்ந்த கட்டடத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவைகள் ஆகியோரின் திறன் மேம்பாட்டிற்கு சிறப்பு இட ஒதுக்கீடு கவனம் அளிக்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 10,865 இளைஞர்கள் பயிற்சியை முடித்துள்ளனர் மற்றும் 2,135 இளைஞர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CBT)

நகர்ப்புர ஏழை எளிய மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு காரணிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டுதலை இத்திட்டம் வழங்குகிறது. இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட மாநில, மாவட்ட மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அளவிலான நிறுவன அமைப்புகளை வலுவானதாக உருவாக்குவதே ஆகும்.

### 4. சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)

நகர்ப்புர தனி நபர் ஏழை மற்றும் குழுக்களுக்கு அவரவர் திறன், தகுதி, பயிற்சி

மற்றும் உள்ளூர் தேவைக்கேற்றார் போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்கு இத்திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரை 33,467 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022–23 ஆம் ஆண்டில், சுய உதவிக் குழுக்களுக்கு 1,717.65 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**அ) தனிநபர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP –I):** தொழில்முனைய ஆர்வமுள்ள நகர்ப்புர ஏழைகளை கண்டறிந்து, 2.00 இலட்சம் ரூபாய் வரை வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறுவதற்கு இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்படுகிறது.

2022–23 ஆம் ஆண்டில், 7,592 தனி நபர்களுக்கு தொழில் தொடங்க 41.45 கோடி ரூபாய் வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆ) குழு சுய வேலைவாய்ப்பு திட்டம் (SEP–G):**

சுய உதவிக் குழுவில் உள்ள தொழில் முனைவதில் ஆர்வமுள்ள உறுப்பினர்கள்

இணைந்தோ அல்லது நகர்ப்புர ஏழைகளைக் கொண்ட குழுவாகவோ சுய வேலைவாய்ப்பிற்கான தொழில் துவங்கிட வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறுவதற்கு இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 3,330 குழுக்களுக்கு 105.99 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**இ) சுய வேலைவாய்ப்பு திட்டம் - வங்கி இணைப்பு (SEP-BL):**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளில் இருந்து இந்திய ரிசர்வ் வங்கி வகுத்த வழிமுறைகளின்படி, வட்டி மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. முறையாக கடன் திருப்பம் செய்யும் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டிமானியம் உரிய காலத்தில் வெளிப்படை தன்மையுடன் வழங்கிட PAiSA Portal - என்ற இணையதளத்தின் மூலம் வழிவகை செய்யப்படுகிறது.

2022 - 23 ஆம் ஆண்டில், 48.69 கோடி ரூபாய் சுய வேலைவாய்ப்பு திட்ட பயனாளிகளுக்கு வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 8.2 கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் பிற துறைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் இயக்கத்தின் முக்கிய நோக்கமான வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு அடைவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையுடன் இணைந்து, உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை மேம்படுத்த PMFME திட்டத்தின் கீழ் உணவு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள நகர்ப்புர சுய உதவிக் குழு உறுப்பினர்களை கண்டறிந்து அவர்களின் தொழிலுக்கான மூலதன நிதி பெறுவதற்கு வழிவகை செய்கிறது.
- மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேசிய சுகாதார இயக்கத்துடன் இணைந்து சுய உதவிக் குழுக்களை சார்ந்த 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் (WHV) செயல்படுத்துகின்றனர்.
- தூய்மை பாரத இயக்கம் – 2.0 (நகர்ப்புரம்) திட்டத்தின் கீழ், திட மற்றும் திரவ கழிவுகளை அந்தந்த வீட்டிலேயே மேலாண்மை செய்வது

தொடர்பான விழிப்புணர்வை வீடுதோறும் சென்று மேற்கொள்வதில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.

## 8.3 நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள்

நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் **(SUSV)** மற்றும் நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் **(SUH)** ஆகிய திட்டங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு மற்றும் நிதியுதவி வழங்கும் முகமையாக செயல்படுகிறது.

# 9. தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 (VKP)

## 9. தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம்

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றல் படுத்துதல் திட்டம் (TNEPRP), வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (1.0) என்றழைக்கப்பட்டது. மகளிர் திட்டம் செயல்படுத்தியதில் கற்று கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறிதல் (PIP) முறையால் அடையாளம் காணப்பட்ட ஏழை எளிய மக்களுக்கான அமைப்புகளை உருவாக்கி, ஏழை எளியோரை ஆற்றல் பெறச்செய்வதை நோக்கமாகக் கொண்டு "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" 2005–06 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த வெற்றிகரமான வழிமுறை மற்றும் அணுகுமுறையானது 2013 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் வட்டாரம் மற்றும் மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இத்திட்ட நடவடிக்கைகளும் அதன் பாராட்டதக்க செயல்முறைகளும், வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு வெற்றிகரமான மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவடைந்ததும், புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும், உயர் நிலை

அமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், நிதியுதவி வழங்கவும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

2021–22 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (2.0) என்று அழைக்கப்படும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம், மூன்றாம் தலைமுறை வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அதிகாரம் அளிக்கும் திட்டம் ஆகும். ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தைப் ஏற்படுத்தவும், அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றவும் பெண்களை முன்னிலைப்படுத்திய நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. இத்திட்டம் 31 மாவட்டங்களில் (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் நீங்கலாக) 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உலக வங்கிக்கும் தமிழக அரசுக்கும் இடையே 70:30 என்ற நிதிப் பகிர்வு விகிதத்தில் இத்திட்டத்திற்காக 910.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திட்ட மேம்பாட்டு நோக்கங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

**9.1 முக்கியக் கூறுகள்**

இந்த திட்டம் பின்வரும் நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியது:

1. ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு
2. தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்குதல்
3. திறன் மற்றும் வேலைவாய்ப்புகள்
4. திட்ட மேலாண்மை

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு, பாலின சமத்துவம், தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம், அறிவு மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு, கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை இத்திட்டத்தில் அனைத்து கூறுகளுடனும் இணைந்து செயல்படும்.

இத்திட்டத்தின் முக்கிய செயல்பாட்டு நுணுக்கங்கள் பின்வருமாறு:

1. **நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி சார்ந்த உதவிகள்:**

இத்திட்டத்தின் மூலம் இரண்டு வகையான நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன.

1) தனிநபர் நிறுவனங்கள்
2) குழு நிறுவனங்கள்

**தனிநபர் நிறுவனங்கள்:**

இத்திட்டத்தின் மூலம் தனி நபர் நிறுவனங்கள் கோவிட் நிதி உதவித் திட்டம், இணைமானிய நிதி உதவித் திட்டம் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், சட்டரீதியான பதிவுகளைப் பெற இத்திட்டத்தின் ஓரிட சேவை மையங்கள் உதவுகிறது.

**குழு நிறுவனங்கள்:**

இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட வகையான குழு நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன.

I. தொழிற் குழுக்கள்
II. உற்பத்தியாளர் குழுக்கள்
III. உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்

துவக்க நிதியை வழங்குதல், வங்கிக்கடன் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவை குழு

நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் ஆகும்.

**(1) குழு நிறுவனங்களுக்கு துவக்க நிதி**

புதிய குழு நிறுவனங்களுக்கு தொழில் தொடங்க ஏதுவாக துவக்க நிதி வழங்கப்படுகிறது. இந்நிதி மூலப்பொருட்களை கொள்முதல் செய்வதற்கு முதலீடாக பயன்படுத்தப்படுகிறது.

**அ) உற்பத்தியாளர் குழுக்கள் –** குறிப்பிட்ட விளைபொருட்களில் 30 முதல் 150 உற்பத்தியாளர்கள், கூடுதல் வருவாயைப் பெறுவதற்காகவும், உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைக்கவும் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. முக்கிய தகுதிகளை எய்தியதன் அடிப்படையில் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.75,000 துவக்க நிதி வழங்கப்படுகிறது.

இதுவரை, 5,000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு துவக்க நிதியாக 50.73 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2022 – 23 ஆம் ஆண்டில் 1,133 உற்பத்தியாளர் குழுக்களுக்கு துவக்க நிதியாக ரூ. 8.49 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**ஆ) தொழிற் குழுக்கள்** – 10 முதல் 30 உறுப்பினர்கள் கூட்டு உரிமை மற்றும் வணிக நடவடிக்கைகளின் மீது பகிரப்பட்ட வளங்கள் மற்றும் இலாபத்துடன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். பொருளாதார மேம்பாட்டிற்காகவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் ஒன்றுபடுகின்றனர். தொழிற்குழுக்கள் உரிய தகுதியை எய்தியதன் அடிப்படையில் ரூ.75,000 துவக்க நிதியுதவி வழங்கப்படுகின்றன.

இதுவரை, மொத்தம் 1,000 தொழில் குழுக்களுக்கு துவக்க நிதி ரூ. 9.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2022 – 23 ஆம் ஆண்டில், 152 தொழில் குழுக்களுக்கு துவக்க நிதி ரூ. 1.14 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**இ) உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் (PC)** உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்பது உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவையை வழங்குதல் ஆகியவற்றிற்காக முறையான உயர்நிலை

ஒருங்கிணைப்பு ஆகும். உரிய தகுதிகளை எய்தியதற்குப் பின் இக்கூட்டமைப்புகளுக்கு ரூ.30 இலட்சம் துவக்க நிதி நான்கு தவணைகளில் வழங்கப்படுகிறது. 300 முதல் 3,000 உற்பத்தியாளர்கள் வரை ஒருங்கிணைக்கப்பட்டு உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 34 புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், பிற திட்டங்களின் வாயிலாக உருவாக்கபட்ட 19 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஆதரவு அளிக்கப்படுகிறது. இக்கூட்டமைப்புகள் அனைத்தும் இந்திய நிறுவனங்கள் சட்டம், 2013–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2022–23 ஆம் ஆண்டில், 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு துவக்க நிதியாக 7.00 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## 2. சமுதாயத் திறன் வளர்ப்பு

தொழிற்திறன், வாழ்வாதார மேம்பாட்டிற்கும், வருமானத்தை உயர்த்துவதற்கும், ஏழை எளிய மக்களின் திறமையை மேம்படுத்தவும், தேவையான ஒன்றாகும். ஊரகப் பகுதி மக்களுக்கு அவர்களின்

பகுதியிலேயே பயிற்சி அளிக்க, உள்ளூரிலேயே உள்ள திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் மூலம் சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

பாரம்பரிய மற்றும் அதிக வருமானம் ஈட்டக்கூடிய கைவினை தொழில்களை செய்பவர்கள் மற்றும் வல்லுநர்களை தேர்வு செய்து, குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளுடன் ஊராட்சி / வட்டார அளவில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊரகப் பகுதிகளில் திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)**

உள்ளூர் மற்றும் பாரம்பரிய வருமானம் ஈட்டக்கூடிய திறன்களின் அடிப்படையில், தேவையான உள்கட்டமைப்புடன் தொழில் செய்யக்கூடிய உள்ளூர் செயல் வல்லுநர்கள்/ நிபுணர்கள் அல்லது தொழில்முனைவோர்கள், முதன்மை பயிற்சியாளர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் (PLF) மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியாளர்கள், அதே கிராமத்தில்/வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊதியம் மற்றும் சுயதொழில் தொடங்குவதற்காக, ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு

பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளிக்கின்றனர். சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்க ஏதுவாக ரூ.70,000 முதல் ரூ.1.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இதில் பயிற்றுநரின் ஊதியம், பயிற்சிக் கருவிகள், சீருடைகள் போன்றவைகள் அடங்கும்.

2022-23 ஆம் நிதியாண்டு வரை, 1,591 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 33,681 கிராமப்புற இளைஞர்களுக்கு 11.92 கோடி ரூபாயில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 1,090 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு 22,143 ஊரக இளைஞர்களுக்கு 7.99 கோடி ரூபாய் செலவில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

**சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)**

சமுதாயப் பண்ணைப் பள்ளிகள், உற்பத்தி, உற்பத்தித்திறன், பயிர் பல்வகைப்படுத்துதல், கால்நடை மற்றும் கோழி வளர்ப்புகளை மேம்படுத்தும் பொருட்டு அமைக்கப்படுகின்றன. இப்பள்ளிகள், பல வருட அனுபவத்தின் மூலம் நிபுணத்துவம் பெற்ற, புதிய யுக்திகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் பிற விவசாயிகளுக்கு கற்றுக் கொடுக்கும் திறன் கொண்ட விவசாயிகளால் வழி நடத்தப்படுகிறது.

வல்லுநர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU)/ வேளாண் அறிவியல் மையம் (KVK)/ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. இவர்கள் மற்ற விவசாயிகளுக்கு தொடர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குகின்றனர். சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்க ஏதுவாக ரூ. 70,000 முதல் ரூ. 1.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இதில் பயிற்றுநரின் ஊதியம், பயிற்சிக் கருவிகள், செயல்விளக்கப் பண்ணைகளை நிறுவுதல் போன்றவை அடங்கும்.

2022-23 ஆம் நிதியாண்டு வரை, 5,392 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 1,64,128 விவசாயிகளுக்கு 45.75 கோடி ரூபாய் செலவில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 4,271 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 1,29,439 விவசாயிகளுக்கு 38.13 கோடி ரூபாய் செலவில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 3. தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்

தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களுக்கு முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி சேவைகள் பெறுவதை உறுதி செய்ய இணை மானிய நிதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இணை மானிய நிதி திட்டம் (Matching Grant Program)**

இணை மானிய நிதி திட்டம் என்பது கிராமப்புற தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் உள்ள தேவை மற்றும் அவை கிடைக்கப் பெறுவதற்கான இடைவெளியை பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட ஒரு நிதி சேவையாகும். இது, முதல் தலைமுறை தொழில்முனைவோர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், நிறுவனங்கள், தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்பு மற்றும் வங்கிகளால் கடன் வழங்க சவாலாக கருதப்படும் நுண், குறு மற்றும் சிறு நிறுவனங்கள் முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து நிதிசேவை பெறுவதை இலக்காக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் முறையான ஆவணங்களை உறுதி செய்தல், வணிகத் திட்டம் தயாரித்தல், உரிய நேரத்தில் கடனை வழங்குதல், பயன்படுத்துதல் மற்றும் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றில்

தேவையான வழிகாட்டுதல்களை பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் கடன் பெறுவோரின் நேரத்தையும், சிரமத்தையும் குறைக்கிறது. இணை மானிய நிதி திட்டத்தின் கீழ், பயனாளிகள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு பெறலாம்.

2022-23 ஆம் ஆண்டில், 1,317 தனிநபர் தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகள் மூலம் 13.28 கோடி ரூபாய், இணை மானியத்துடன் கூடிய 44.26 கோடி ரூபாய் கடனாக பெற்று தரப்பட்டுள்ளது.

## 4. வணிகப் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்

தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ளவும், மாற்றத்திற்கான யோசனைகளை உருவாக்கவும், ஏற்கனவே உள்ள உற்பத்திப் பொருள் மற்றும் தொழில் உத்திகளை மறு வடிவமைப்பு செய்யவும் வணிகப் புதுமை கண்டுபிடிப்புகள் உதவுகின்றன.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தனிநபர் மற்றும் குழு தொழில்

நிறுவனங்களுடன் புத்தொழில் நிறுவனங்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில் துறை மாணவர்கள் இணைந்து வணிகப் புதுமை தொழில் திட்டங்களை செயல்படுத்த இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2022-23 ஆம் ஆண்டில், 10 வணிகப் புதுமை தொழில் திட்டங்கள் ரூ.79.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5. திறன் மேம்பாடு**

தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP) தொழில்முனைவோர் மற்றும் முன்னோடி விவசாயிகளுக்கு நிதி, சந்தைப்படுத்தல், வணிகத் திட்டம் தயாரித்தல், பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல், சட்டப்பூர்வ இணக்கங்கள் போன்ற பல்வேறு அம்சங்களில் அவர்களின் தொழில் முனைவுத் திறன்களை மேம்படுத்துவதற்காக பயிற்சி வழங்கப்படுகிறது.

இதுவரை 5,345 தொழில் முனைவோர் மற்றும் முன்னோடி விவசாயிகளுக்கு (SPARKs), தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டப் (EDP) பயிற்சி 1.30 கோடி ரூபாய் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நிதியுதவி செய்யப்படும் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகளின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், முதன்மைச் செயல் அலுவலர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஓரிட சேவை மையத்தில் பணியாற்றும் தொழில் மேம்பாட்டு அலுவலர் மற்றும் தொழில் நிதி அலுவலர்களுக்கு வணிக மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் சிறந்த கல்வி நிறுவனங்கள் மூலமாக வணிக நிதி மேலாண்மை பயிற்சி வழங்கப்படவுள்ளது.

## 9.2 ஆதரவு நிறுவனங்கள்

**i. வணிக வசதி ஏற்படுத்துதல்:** இத்திட்டம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு சந்தை வசதிகள், நிதியுதவிகள் மற்றும் தொழில் திட்டம் தயாரித்தல் போன்ற செயல்பாடுகளுக்கு சட்டரீதியான கூறுகளைப் பின்பற்றவும் ஓரிட சேவை மையம் மற்றும் தொழில் முனைவாக்க மையம் ஆகியவற்றின் மூலம் துணைபுரிகிறது.

**ii. இடம்பெயர்வு ஆதரவு மையம் (MSC)** இடம்பெயர்வு ஆதரவு மையங்கள், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் சிறந்த வேலைவாய்ப்புகளைத் தேடி சொந்த ஊரிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான ஆதார மையங்களாக செயல்படுகின்றன. இம்மையங்கள், நலிவடைந்த மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தேவையான ஆலோசனைகள், தேவையான தகவல்கள், உள்ளூர் பகுதியைப் புரிந்துகொள்ள செய்தல் போன்ற சேவைகளை வழங்குகின்றன. முன்மாதிரியாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் 40 பேர் தங்கும் வகையில் ஒரு இடம்பெயர்வு ஆதரவு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, மேலும் சில இடம்பெயர்வு ஆதரவு மையங்களை, திறன் பயிற்சி நிறுவனங்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் தொழில் அமைப்புகள் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 9.3 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பது திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகளோ அல்லது திட்ட இலக்கில் இருந்து விலகலோ இருப்பின் அதனைக் கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள்

சரி செய்ய திட்ட மேலாளர்களுக்கு உதவி செய்யவும், திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விபரங்களை தயார் செய்வதற்கும் தொடர்ந்து இயங்கும் ஒரு செயல் முறையாகும்.

**அ) குறை தீர்க்கும் செயல்முறை:**

தொழில் முனைவோராக உள்ள சுய உதவிக்குழு குடும்ப உறுப்பினர்களுக்கு பணியிடத்தில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திட்ட செயல்பாட்டாளர்கள் மற்றும் பயனாளிகள் திட்ட மாவட்டங்களில் இருந்து குறை தீர்க்கும் செயல்முறை (GRM) புகார்களை பதிவு செய்ய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களுக்கு அந்தந்த மாவட்ட திட்ட மேலாண்மை அலகினால் (DPMU) தீர்வு காணப்படுகிறது.

**ஆ) சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு (ESMF)**

திட்ட செயல்பாடுகளின் சுற்றுச் சூழல் மற்றும் சமூக நிலைத் தன்மையை உறுதி செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது நிறுவனங்களின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தின் பாதகமான தாக்கங்களைத் தடுப்பது மற்றும்

குறைப்பது ஆகும். மேலும், பசுமை நிறுவனங்களை ஊக்குவித்தல், சுற்றுச்சூழல் சங்கிலி மற்றும் சமூக நிலைத் தன்மையை உறுதி செய்தல் இக்கட்டமைப்பின் முக்கிய பணியாகும்.

பங்கேற்பு உத்திரவாத அமைப்பு (PGS) சான்றிதழின் கீழ், 133 விவசாயிகளின் 142 ஏக்கர் நிலங்கள், மண்டல மன்றத்தினால் பதிவு செய்யப்பட்டு இயற்கை விவசாயத்திற்காக இத்திட்டத்தின் மூலம் உதவி செய்யப்படுகிறது.

**இ) தகவல் மேலாண்மை அமைப்பு**

தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் (ICT) என்பது திட்டத்தின் செயல்பாடுகளை நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் அவற்றின் திறமையான செயல்பாட்டிற்கான இணையதளத்தை நிறுவுவதற்கான தவிர்க்க முடியாத பகுதியாகும். இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த இணையதளமானது (IDP) (www.idp.tnrtp.org) தகவல் மேலாண்மை அமைப்பை (MIS) பலப்படுத்துகிறது மற்றும் இத்திட்டம் குறித்த அனைத்து தரவுகளையும் உடனுக்குடன் பெறும் வகையில் செயல்படுகிறது.

**ஈ) அறிவு சார் மேலாண்மை, தகவல் தொடர்பு, மற்றும் கற்றல் அமைப்புகள்:**

"தகவல் களஞ்சியம்" என்பது திட்டம் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் இணையத்தில் அணுகுவதற்கு உதவும் ஒரு தளமாகும். இதன் மூலம் அனைத்து பங்குதாரர்களுக்கும் வழிகாட்டி நெறிமுறைகள், சீர்மிகு செயல்பாட்டு முறைகள் (SOP), தகவல்தொடர்பு ஆவணங்கள் (IEC), புகைப்படம் மற்றும் காணொலி ஆவணங்கள், வெற்றிக் கதைகள் போன்றவற்றை எந்த நேரத்திலும் எங்கிருந்தும் இணைய வழியில் அணுக வழிவகை செய்யும். இத்திட்டத்திற்கான இணையதள முகவரி "www.tnrtp.org" ஆகும்.

**2023-24 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள்**

- 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு துவக்க நிதியாக 8.00 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது.
- 4,000 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 100 குழு நிறுவனங்களுக்கு இணைமானிய நிதியாக 53.00 கோடி ரூபாய் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- 3,000 நுண், குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி (EDP) ரூ.2.00 கோடி செலவில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

# 10. முடிவுரை

**முடிவுரை**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிரின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, ஏழை மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மகளிருக்கு திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்டங்களின் மூலம் அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

விடுபட்ட அனைத்து மகளிரையும் குழுக்களில் இணைத்து, பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்தி, அவர்களை சமுதாயம் சார்ந்த அமைப்புகளோடு இணைப்பதற்கு இந்நிறுவனம் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இச்சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் திறனை மேம்படுத்தி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், அவர்களின் வாயிலாகவும் பல்வேறு அரசு திட்டங்களின் நன்மைகளை கொண்டு செல்வதை உறுதி செய்கிறது. ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள இலக்கு மக்களாகிய அடித்தட்டு மக்களுடைய சமூக முன்னேற்றத்தை மேம்படுத்துவதையே இவ்வியக்கம் நோக்கமாக கொண்டுள்ளது.

பொருளாதார மேம்பாட்டையும் கடந்து, சமூகத்தில் பாலின சமத்துவத்தை அடைய பல்வேறு

விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பாலினம், சமத்துவம் போன்றவற்றை வலியுறுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து பாடுபடுகிறது. மேலும், சமூகத்தில் மகளிர், அவர்களின் உரிமைகளை பெறவும் தேவைப்படும் தருணங்களில் சட்ட உதவி அமைப்புகளை அணுகவும் இந்நிறுவனம் ஆதரவளிக்கிறது.

பண்ணை சார் மற்றும் பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகளை மேலும் வலிமைப்படுத்துவதற்கான தொகுப்பு நடவடிக்கைகள், மதிப்பு கூட்டுதல், சந்தை படுத்துதல் மற்றும் தனித்தன்மை போன்ற நடவடிக்கைகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. வளங்களை பரிமாறிகொள்ளுதல், சிறப்பான செயல்பாடுகளை வெளிகொணர்தல் மற்றும் சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் முன்மாதிரிகள் போன்றவற்றின் மூலம் இந்த இயக்கங்களுக்கிடையே வலிமையான பிணைப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் அரசு திட்டங்களின் பயன்களை கடைகோடி இலக்கு மக்களுக்கும் சென்றடைவதை உறுதி செய்வதோடு அவர்களின் திறமையான செயல்பாடுகள் மூலம் ஒட்டுமொத்த சுய உதவிக் குழுவைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின்** அவர்களின் துடிப்பு மிக்க தலைமையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, அனைத்துவிதமான வளர்ச்சிகளை உள்ளடக்கிய வறுமையற்ற தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்ற தொலைநோக்கு பார்வையினை நிறைவேற்றும் வகையில் பல முயற்சிகளை முன்னெடுத்து செல்லும்.

**உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

# மாநில அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் விழா




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளியில் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும் மாநில அளவிலான விழாவில் பங்கேற்றார்

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.09.2022 அன்று மதுரையில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், 16.02.2023 அன்று சேலம், சூரமங்கலம் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## ஊரக வாழ்வாதார இயக்கம் – பண்ணை சார் வாழ்வாதார தொழில்கள்



விவசாய இயந்திரங்களைப் பயன்படுத்தும் பெண் விவசாயிகள்



காய்கறி சாகுபடியில் பெண் விவசாயிகள்




ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சுயஉதவிக்குழு பெண்



தேனீ வளர்ப்பு தொழில் நடத்தும் சுய உதவிக்குழு குறு நிறுவனம்

## ஊரக வாழ்வாதார இயக்கம் – பண்ணை சாரா வாழ்வாதார தொழில்கள்



கூடை நெசவில் ஈடுபட்டுள்ள சுய உதவிக்குழு



உணவு பொருட்கள் தயாரிக்கும் சுய உதவிக் குழு



தென்னை சார்ந்த கைவினை பொருட்கள்
தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழு




சுய உதவிக் குழு நடத்தும் ஆடைப் பிரிவு

## நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்  கீழ் வாழ்வாதார நடவடிக்கைகள்



சுய உதவிக் குழு நிறுவனம் –
மர வேலைப்பாடு அலகு



சுய உதவிக் குழு குறு நிறுவனம் –
ஆரி வடிவமைப்பு பிரிவு



ESTP இன் கீழ் நகர்ப்புற இளைஞர்களுக்கு
எலக்ட்ரீசியன் பயிற்சி



சுய உதவிக் குழு செயல்பாடு – தேயிலை தோட்டத்தை
குத்தகைக்கு எடுத்து தேயிலை பதப்படுத்துதல்

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம் – தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் குழுக்கள்



தொழில் குழு – மண்பாண்டங்கள்



இணை மானிய நிதி பயனாளி – நெசவு தொழில்



உற்பத்தியாளர் குழு – மஞ்சள் சாகுபடி



சமுதாய திறன் பள்ளி – இரு சக்கர வாகன பொறிமுறையாளர்

# பிற துறைகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடுகள்




ஊரக வளர்ச்சி துறையுடன் நம்ம ஊரு
சூப்பரு பிரச்சாரம்



சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையுடன்
மஞ்சா பை பிரச்சாரம்



ஊரக வளர்ச்சி துறையுடன் சமத்துவ பொங்கல்

## மக்களை தேடி மருத்துவம்




ஊரக பகுதியில் மகளிர் சுகாதார தன்னார்வலர் மருத்துவ பராமரிப்பு வழங்குதல்



நகர்புர பகுதியில் மகளிர் சுகாதார தன்னார்வலர் மருத்துவ பராமரிப்பு வழங்குதல்

## ஊரகம் மற்றும் நகர்புரங்களில் மாவட்ட வாரியாக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 17.03.2023 வரை







சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் - ஆண்டு வாரியாக (ஊரகம் , நகர்புறம், மொத்தம்)
SHG Groups
60,000
50,000
40,000
30,000
20,000
10,000
-
26,087
11,328
14,759
13,811
9,482
4,329
19,164
7,839
11,325
21,964
9,338
12,626
20,275
8,774
11,501
26,987
13,510
13,477
45,722
24,456
21,266
36,957
16,519
20,438
49,052
29,052
20,000
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
2022-23
Year
ஊரகம்
நகர்புறம்
மொத்தம்

# மாவட்ட வாரியாக சுயஉதவிக்குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்பு (2022-2023)




சுய உதவிக் குழு வங்கி கடன் இணைப்பு–
ஆண்டு வாரியான முன்னேற்றம் கடந்த 10 ஆண்டுகளில்
₹ 30,000.00
₹ 25,000.00
₹ 20,000.00
₹ 15,000.00
₹ 10,000.00
₹ 5,000.00
₹ 0.00
Amount (in cr.)
₹ 6,035.56
₹ 6,171.74
₹ 6,191.49
₹ 6,387.52
₹ 8,331.73
₹ 11,448.99
₹ 13,300.64
₹ 18,885.98
₹ 21,392.52
₹ 25,022.19
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
2022-23
Year



திறன் குழுமம் வாரியாக ஊரக இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட திறன் பயிற்சிகள்*
2019 முதல் 2023 வரை
பயிற்சி பெற்றவர்கள்
6,000
5,000
4,000
3,000
2,000
1,000
-
5,776
5,758
4,889
4,641
4,170
3,855
3,789
3,245
2,642
2,600
914
Healthcare
IT-ITES
Apparel
Electronics
BFSI
Tourism & Hospitality
Automotive
Retail Management
Logistics
Others
Beauty and Wellness
திறன் குழுமங்கள்
* DDUGKY

# VKP - சமுதாயத் திறன் பள்ளிகள் - தொழில்கள் விபரம்

**மொத்த சமுதாயத் திறன் பள்ளிகள்**
**1591**




**குறி விளக்கம்**

- ▼ தையல்/ ஆரி எம்பிராய்டரி (248)
- ● கொத்து மற்றும் கான்கிரீட் வேலை (109)
- ▶ காளான் வளர்ப்பு (73)
- ▲ டூ வீலர் மெக்கானிக் (83)
- ▼ சணல் பைகள் (75)
- ■ கைவினைப் பொருட்கள் (148)
- ▲ உணவு மதிப்பு கூட்டல் (124)
- ■ மின்சார வேலைகள் (114)
- + கோட்டா மட்பாண்டங்கள் (1)
- ■ தோடா எம்பிராய்டரி (3)
- ● மற்றவை (613)

## VKP - சமுதாயப் பண்ணை பள்ளிகள் - விளைப்பொருட்கள் விபரம்

**மொத்த சமுதாயப் பண்ணை பள்ளிகள்**
**5392**




குறி விளக்கம்

- கால்நடை பராமரிப்பு (2452)
- நிலக்கடலை (916)
- உளுந்து (450)
- காய்கறிகள் (487)
- வாழை (230)
- தேங்காய் (134)
- பச்சைப்பயறு (93)
- தினை சாகுபடி (265)
- மற்றவை (365)